
# பாட்டாளி சிந்தனை

Volume 33 No 7 சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)
S U C I (Communist)
March 2023 தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் விலை ரூ 5

## மாபெரும் மார்க்ஸ் அவர்களுக்கு செவ்வணக்கம்!



5 மே 1818 – 14 மார்ச் 1883

“தொழிற்சாலையினுள் குவிக்கப்பட்டுள்ள திரளான தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் முதலாளித்துவ அரசுக்கும் அடிமைகளாக இருப்பது மட்டுமல்ல, நாள்தோறும் மணிதோறும் எந்திரத்தாலும், மேலாளர்களாலும், அனைத்துக்கும் மேலாகத் தனிப்பட்டத் தொழிலதிபராலும் அடிமைப் படுத்தப்படுகிறார்கள். இந்தக் கொடுங் கோன்மை, லாபமே தன் இறுதி லட்சியம் என எந்த அளவுக்கு அதிக வெளிப்படையாகப் பிரகடனம் செய்கிறதோ அந்த அளவுக்கு முதலாளித்துவம் மேலும் அற்பமானதாக, மேலும் வெறுக்கத்தக்கதாக, மேலும் கசப்பூட்டுவதாக இருக்கிறது.”

காரல் மார்க்ஸ்
*கம்யூனிஸ்ட் அறிக்கை*

## மாபெரும் ஸ்டாலின் அவர்களுக்கு செவ்வணக்கம்!



18 டிசம்பர் 1878 – 5 மார்ச் 1953

“ஒரு முதலாளித்துவ ஜனநாயகக் குடியரசு, முதலாளித்துவத்திற்குச் சாத்தியமான மிகச் சிறந்த அரசியல் பாதுகாப்பு சிப்பி (shell) ஆகும். எனவே, தனக்கான இந்த மிகச் சிறந்த அரசை கட்டுப்படுத்தும் நிலையை முதலாளித் துவம் எடுத்துவிட்டால் அது தனது அதிகாரத்தை மிகவும் பாதுகாப்புடன் நிலைநிறுத்திக்கொள்கிறது. எந்த அளவிற்கென்றால், தனிநபர் அல்லது நிறுவன மாற்றமோ, முதலாளித்துவ குடியரசின் கட்சிகள் மாற்றமோ அந்தச் சிப்பியை அசைக்கக் கூட முடியாது.

J V ஸ்டாலின்
*அரசு குறித்து*

# கம்யூனிச சித்தாந்தத்தை உயர்த்திப்பிடிப்போம்!

*[தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டான இவ்வருடத்தை அனுசரிக்கும் வகையில் அவரது படைப்புகளிலிருந்து சில அம்சங்களை பிரசுரித்து வருகிறோம். அவ்வகையில், ‘ஏன் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மட்டுமே ஒரே உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி’ என்ற தலைப்பில், 1969, மார்ச் 18ல் தோழர் சிப்தாஸ் கோஷ் மேற்கு வங்க தோழர்களிடம் ஆற்றிய உரையின் ஒரு சிறிய பகுதியை இங்கு வழங்குகிறோம்]*

**வெளித்தோற்றத்தில் புரட்சிகர வாழ்க்கை கடினமாக தோன்றும். ஆயினும், இடைவிடாத போராட்டங்களின் மத்தியில் அனுபவிக்க முடிகின்ற மன அமைதியையும் மகிழ்ச்சியையும் சாதாரண வாழ்க்கையில் ஒருபோதும் காண முடியாது**

கம்யூனிச சித்தாந்தம், ஒரு துறவற சித்தாந்தம் அல்ல என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும். கம்யூனிஸ்ட்களாக இருந்து கொண்டு நாம் எதையும் தியாகம் செய்துவிடவில்லை. சிறுமையான, சாமானியமான, அசிங்கமான ஒரு வாழ்க்கையை விட்டுவிட்டு நாம் ஒரு உன்னதமான வாழ்க்கையில்தான் அடியெடுத்து வைத்திருக் கிறோம். இதை யாராவது தியாகம் என்று கூற விரும்புவார்களா? அப்படியெனில் தியாகம் என்று நாம் எதைக் குறிப்பிடுகின்றோம்? உதாரணமாக நீங்கள் ஒரு குடிசையில் வாழ்கிறீர்கள். இப்போது நீங்கள் வாழ்வதற்கு ஒரு அரண்மனை கொடுக்கப்படுகிறது, நீங்களும் பாழடைந்து, அழுக்கும் சகதியும் நிறைந்த குடிசையை விட்டு வெளியேறி அரண்மனையில்

தொடர்ச்சி 5ம் பக்கம்




5 ஆகஸ்டு 1923 – 5 ஆகஸ்டு 2023

எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டை அனுசரிப்போம்

# சென்னையில் தென்னிந்திய மொழிப் பாதுகாப்பு மாநாடு




**மேடையில் மாநாட்டு தலைவர்கள்**

இந்திய அலுவல் மொழிக்கான பாராளுமன்ற நிலைக்குழு கடந்த ஆண்டு தனது பரிந்துரையில் ‘இந்தியை ஆட்சி மொழியாக்கவேண்டும், ஆங்கிலத்தை படிப்படியாக நீக்கவேண்டும், மருத்துவம் பொறியியல் போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் இந்தியை பயிற்றுமொழியாக்க வேண்டும்,’ என்பன போன்ற பரிந்துரைகளை வழங்கியது. இது நாட்டிலுள்ள கல்வியாளர்களை அதிர்ச்சியடையச் செய்தது. இந்தியை ஒற்றை ஆட்சி மொழியாக்குவதால் நாட்டின் மற்ற அனைத்து மொழிகளும் புறந்தள்ளப்படும் அபாயம் இருக்கிறது. ஆங்கிலத்தை நீக்குவது நவீன அறிவு வளர்ச்சிக்கு பெருந்தடையாக இருக்கும். எனவே இதற்கு எதிராக உடனடியாக அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி (AISEC) யின் தனது கண்டனத்தை பதிவு செய்தது. இந்த அபாயத்தை நாட்டு மக்களிடம் எடுத்துரைத்து மக்களிடம் கருத்தொற்றுமையை ஏற்படுத்தி நாடு தழுவிய இயக்கமாக மாற்ற திட்டமிட்டது. மண்டல அளவிலான மாநாடுகளை நடத்த தீர்மானிக்கப் பட்டது. அதன் தொடக்கமாக மொழிப்

தொடர்ச்சி 2ம் பக்கம்

## சென்னையில் தென்னிந்திய மொழிப் பாதுகாப்பு மாநாடு

# ஆங்கிலேயர்களிடமிருந்து சமஸ்கிருதம் நம்மை விடுவிக்கவில்லை, ஆங்கிலமே விடுதலை பெற்றுத்தந்தது

*1ம் பக்கத் தொடர்ச்சி*

*பாதுகாப்புக்கான தென்னிந்திய மாநாடு பிப்ரவரி 17 அன்று சென்னை பிட்டி தியாகராயர் மகாலில் நடந்தது.*

இதற்கான பிரச்சாரம் ஆந்திரா, தெலங்கானா, கேரளா, கர்நாடாகா, தமிழ்நாட்டில் முழுவீச்சில் நடத்தப்பட்டது. இப் பிரச்சாரம் பள்ளிகள் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்கள் குறிப்பாக மாணவர்களிடம் அமோக வரவேற்பைப் பெற்றது. சென்னையிலிருந்து 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர். பிற மாநிலங்களிலிருந்தும் ஆந்திரா, தெலுங்கானா, கேரளா, கர்நாடகா மற்றும் புதுச்சேரி உள்பட மாணவர்களும் ஆசிரியர்களும் சுமார் 200 பேர் கலந்து கொண்டனர். மேலும், உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத், டெல்லி, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களிலிருந்தும் கல்வியை நேசிக்கும், தாய்மொழியைப் பாதுகாக்க விரும்பும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக மொழிப்போர் தியாகிகளுக்கு அகில இந்திய கல்விப் பாதுகாப்பு கமிட்டியின் தமிழ்நாடு மாநில கமிட்டி உறுப்பினர் கோமல் தமிழமுதன் தலைமையில் புகழ் மரியாதை செலுத்தப்பட்டது. கவிஞரும் எழுத்தாளருமான முனைவர் தமிழ் மணவாளன், கல்வியாளரும் எழுத்தாளருமான ஆசிரியை உமா மகேஷ்வரி மொழிப்போர் தியாகிகளுக்கு வணக்கம் செலுத்தியதோடு தமிழ்நாட்டிலும் மற்ற மாநிலங்களிலும் நடைபெற்ற மொழிப் போராட்டங்களை நினைவு கூர்ந்தனர்.

**மாநாட்டிற்குத் தலைமை வகித்த முன்னாள் ஜெஎஸ்எஸ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ஜவஹர் நேசன்** பேசுகையில் ‘மொழி வெறுமனே தொடர்புக்கும் செய்தி பரிமாற்றத் திற்குமானது மட்டுமல்ல அறிவை உருவாக்கு வதற்கும் சமூக உறவுக்கும் அவசியம். மொழியை அழித்துவிட்டால் அதனால் உருவாக்கப்பட்ட அறிவு, பண்பாடு எல்லாம் அழிந்துவிடும். நாடுமுழுவதும் இந்தியை ஒற்றை மொழியாகத் திணிக்கின்றனர். இந்தி பேசும் மக்களுக்கு நாம் எதிரியல்ல, இந்திக்கும் நாம் எதிரியல்ல. இந்தியில் அறிவு இருக்கிறதென்றால் நீங்கள் கூற வேண்டாம், நாமே தேடி வந்து இந்தியை கற்றுக்கொள்வோம். ஆனால் ஒற்றை மொழியாக இந்தியைத் திணிக்க முயன்றால் அது இந்தியாவை பிளக்கும் முயற்சியாகும். நாங்கள் இந்தியாவின் ஒற்றுமைக்காகப் போராடுகிறோம். … அகில இந்திய கல்விப் பாதுகாப்பு கமிட்டி 40 ஆண்டுகளாக கல்வியை மட்டுமே பேசிவரும் மாபெரும் இயக்கம். இத்தகைய இயக்கம் இன்று மொழிக்காக, அனைத்து மொழி பேசுபவர்களையும் சேர்த்து இந்த நிகழ்ச்சியை நடத்துகிறது’ என தனது கருத்தை தலைமையுரையில் கூறினார்.

புகழ்பெற்ற புவியியல் அறிஞரும் கல்வியாளரும் **கொல்கத்தா பல்கலைக் கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியருமான துருபஜோதி முகர்ஜி** பேசுகையில் ‘மொழியைக் காப்பதற்காக விடுதலைப் போராட்டம் நடைபெற்றிருக்கிறது, வங்கதேசமே மொழியால் உருவானதுதான்... நாம் இந்திக்கு எதிரானவர்கள் அல்லர், எந்த மொழிக்கும் எதிரானவர்கள் அல்லர். அனைத்து மொழிகளும் வளரவேண்டு மென்று விரும்புகிறோம். ஆனால் இந்தித் திணிப்பு அதற்கு எதிராக உள்ளது … பயிற்றுமொழியாக எது இருக்க வேண்டும்? அனைத்து ஆராய்ச்சிகளும் அறிஞர்களும் கூறியதுபோல கல்வியின் உயர்மட்டம் வரையில் தாய்மொழியில் பயில வேண்டும். அதற்கு சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். அந்தந்த தாய்மொழிகளில் போதிய நூல்கள் இருக்க வேண்டும். தாய்மொழி யில் போதிக்க போதிய எண்ணிக்கையில் ஆசிரியர்கள் இருக்க வேண்டும். அந்த மொழியும் கூட உயர் அறிவியல் தத்துவ கருத்துக்களை கொடுக்கும் வண்ணம் வளர்ந்திருக்க வேண்டும்.

ஆனால் இந்த மூன்று நிபந்தனைகளை எந்த ஒரு இந்திய மொழியும் பூர்த்தி செய்யவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அரசாங்கம் அனைத்து மொழிகளையும் வளர்க்க முயற்சி செய்ய வேண்டும். ஆசிரியர்களுக்கு பயிற்சி, புத்தகங்கள் எழுத வேண்டும் போன்ற நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும். அப்படி இல்லாவிட்டால் படிக்கும் மாணவர்கள் திறன்மிகுந்தவர்களாக உலக நாடுகளுடன் போட்டியிடத்தக்கவர்களாக இருக்க மாட்டார்கள். இது கல்விக்கு பேராபத்தாக முடிந்துவிடும். எனவே ஆங்கிலத்தை உயர்கல்வியில் பயன்படுத்துவது கட்டாயமாகும்.

அலுவல்மொழியாக எது இருக்க வேண்டும்? அரசாங்கங்களுக்கிடையே எது தொடர்பு மொழி? ஆங்கிலம் நீண்ட காலமாக இதனை செய்து வருகின்றது. அதற்கு பதிலாக இந்தியை கொண்டு வருவது மிகவும் பாரபட்சமானதாகும். மற்ற மொழியை சேர்ந்த மக்களுக்கு பாதகமாக இருக்கும். இதனை நாம் ஏற்க முடியாது. இச் செயல், ஒரு மொழி பேசுவோரை மற்ற மொழி பேசுவோருக்கு எதிராகத் தூண்டிவிடுவதில் போய் முடியும் என்று கூறினார்.

**திராவிடர் கழகத் தலைவர் வீரமணி** அனுப்பிய செய்தியில் ‘8வது அட்டவணையில் உள்ள மொழிகளில் பேசு மொழியாக இல்லாத சமஸ்கிருதத்தைத் தவிர மற்ற அனைத்து மொழிகளையும் அலுவல் மொழிகளாக்க வேண்டும்’ என்று வலியுறுத்தினார்.

**தி மாடர்ன் ரேஷனலிஸ்ட், இணை ஆசிரியர் குமரேசன்** பேசுகையில் ‘இந்திய ஆட்சி மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலமும் அலுவல் மொழியாக இருக்குமென்றனர், 1965ல் மறுஆய்வு செய்யப் பட்டபிறகு அதே விதி தொடரவேண்டும் ஆனால் தொடரப்படவில்லை. அப்போது ராஜ்ய சபாவில் உறுப்பினராக இருந்த அண்ணா ஆங்கிலமும் தொடர வேண்டுமென்று வலியுறுத்தினார் …நேருவால் ஆங்கிலம் நீடிக்கலாம் என்ற உறுதியைத்தான் தரமுடிந்தது அதற்கேற்ப சட்டத்தைத் திருத்த முடியவில்லை …காமராஜர் முதல்வராக இருந்தபோது ஆங்கிலத்தை குறைத்து தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி சட்டமன்றத்தில் சிலர் பேசினர். அப்போது, ‘தமிழில் கொடுத்துரலாம், ஆங்கிலத்தை எடுத்துரலாம், அப்போ இந்தி வந்து குந்திக்கிரும்’ என்று காமராஜர் தனக்கே உரிய பாணியில் கூறினார். படிக்காத காமராஜரே ஆங்கிலத்தின் அவசியத்தை அழகாக கூறியுள்ளார். இம்மாநாட்டு செய்தியை வீதிகளெங்கும் எடுத்துச் செல்ல வேண்டும்.’ என்று கேட்டுக்கொண்டார்.

**ஜேஎன்யு பல்கலைக்கழகப் பேராசிரியர் சச்சிதானந்த் சின்கா அனுப்பிய செய்தியில்** ‘தொழில்நுட்ப அறிவுகளை வழங்குவகையில் இந்தி வளர்ந்துள்ளதா? நிச்சயமாக இல்லை. அப்படி இருக்கும்போது எதற்காக இந்தி பேசாதவர்கள் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகப் படிக்காமல் இந்தியை இரண்டாவது மொழியாகப் படிக்க வேண்டும்?’ என்று கேள்வி எழுப்பினார்.

**கேரளாவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற முதுபெரும் பத்திரிகையாளர் பிஆர்பி பாஸ்கர் 90 வயதிலும் உற்சாக மிகுதியால் நின்றபடியே பேசினார்.** அவர் தனது உரையில் ‘இந்தித் திணிப்பிற்கு எதிராக பிரச்சாரத்தில் பங்கேற்றதில் மகிழ்ச்சி… அனைத்து மொழி களையும் சமமாக பாவிக்க வேண்டும். இந்தித் திணிப்பிற்கு எதிரான போராட்டத்தில் தமிழ்நாடுதான் முன்னோடியாக இருந்தது. இளம் தமிழ் மாணவர்கள் போராடி அதனை முறியடித்தனர். அவர்களுக்கு நாம் காலையில் மரியாதை செலுத்தினோம். … மக்களின் தேவைக்கு ஒரு மொழி சேவை செய்தால் பயனளித்தால் அது வாழும். … மொழியின் பயன்தரும் தன்மை முக்கியம் … தாய்மொழிதான் பயிற்றுமொழியாக இருக்க வேண்டும். … எதையும் திணிப்பவர்கள் ஜனநாயகவாதிகளல்லர்’ என்று கூறினார்.

**ராஜபாளையம் ராஜூஸ் கலைக் கல்லூரியின் முன்னாள் முதல்வரும் வரலாற்று ஆய்வாளருமான முனைவர் வெங்கட்ராமன்** அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் ‘மூத்த மொழிகள் அரசு மொழிகளாக இல்லாது போனால் அம்மொழி பேசும் மக்கள் தங்களது கலாச்சார வாழ்வின் அடித்தளமே தகர்ந்ததாகக் கருதுவர். இந்திய ஆட்சி மொழி எனக்கூறி அவர்களின் மேல் இந்தியைத் திணிப்பது அறிவு, ஞானம், கல்வி, அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் அவர்களுக்கு ஒருபோதும் வெற்றியைத் தேடித்தராது. ஆங்கிலம் அயல் மொழியாக இருப்பினும் பெரும்பாலான மாநிலங்களில் மக்கள் தாய்மொழிக் கல்வியுடன் ஆங்கில வழிக் கல்வியையும் ஏற்று வெற்றி காண்கிறார்கள். இந்தி மொழியை அல்லது வேறு எந்த மொழிகளையும் விருப்பத்தின்பேரில் கற்கலாம். ஆனால் சட்டத்தின் மூலமாக பலவந்தமாகத் திணிக்கும்போது தங்களது தாய்மொழிக்கு ஆபத்து எனும் உணர்வு எல்லா இந்தி பேசாத மாநில மக்களுக்கும் ஏற்படும். தாய்மொழிக் வழிக் கல்வி பயின்று அலுவல் பரிமாற்றத்திற்கு ஆங்கில மொழி துணைகொண்டு எல்லாத் துறையிலும் வெற்றி பெற முடியும். அதுவே நாட்டின் முன்னேற்றத்திற்கு ஏதுவாக அமையும். மாற்று மொழித் திணிப்பு என்பது பற்றே இல்லாத பணிக்கும், செயலுக்கும் வித்திடும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை’ என்று தெரிவித்திருந்தார்.

**ஆந்திரா கலைக்கல்லூரி முன்னாள் முதல்வர் பேரா சந்திரசேகர்** தனது உரையில் ‘இந்தியா ஒரு பன்முக நாடு … மக்களின் ஒற்றுமையை சீர்குலைத்து, சிறு எண்ணிக்கை யிலானோர் பேசும் மொழி என்பதால் அவற்றை அடக்குவது சரியல்ல … 2011 மக்கள்தொகை கணக்கெடுப்புப் படி 5 கோடி பேர் உள்ள பீகார் போஜ்புரி மக்களுக்கு இந்தி மொழி புரியாது. … அவர்களுக்கு புத்தகங்கள், இலக்கியங்கள், படங்கள், சடங்குகள் அவர்களது மொழியில் உள்ளன. இந்தி திணிப்பால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகில் 2.5 மில்லியன் ஆராய்ச்சி கட்டுரைகள் ஆங்கிலத்தில்தான் வெளியிடப்படுகின்றன. ஆங்கிலத்தில் புலமை பெறவில்லையெனில் மாணவர்களால் உயர்தர அறிவைப் பெற முடியாது…’ என்று கூறினார்.

**விவேகானந்தா கல்லூரியின் முன்னாள் பேராசிரியரும் வரலாற்று ஆய்வாளருமான முனைவர் கருணானந்தன்** பேசுகையில் ‘மொழிக்கு பண்பாட்டைப்போல் பல பரிமாணங்கள் உண்டு. தேசிய பரிமாணம் மட்டுமல்ல அதற்கு அரசியல், பொருளாதர, கல்விப் பரிமாணமும் உண்டு… சமஸ்கிருதம் கற்றுக்கொள்ளவேண்டும் அது தேவ பாஷை என்கிறார்கள். தேவபாஷையை தேவர்கள் பாதுகாப்பார்கள். மக்கள் மொழியை மக்கள்தான் பாதுகாக்க வேண்டும். … காலனியாதிக்கத்திலிருந்து சமஸ்கிருதம் நம்மை விடுதலை செய்யவில்லை. …ஆனால் நம்மை அடக்கியாண்ட ஆங்கிலேயர் களிடமிருந்து ஆங்கிலமே விடுதலையும் செய்தது. எனவேதான் ஆங்கிலத்தின்மீது நமக்கு காதலுண்டு. … மக்கள் மொழி உயிரோடிருக்க மாநில அரசாங்கங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். … தாய்மொழியில் புத்தகங்கள் எழுதுவதை வங்கத்தில் ஈஸ்வர சந்திர வித்யாசாகர்தான் முதலில் தொடங்கினார். சமஸ்கிருதத்தின் ஆதிக்கத்திலிருந்து வங்க மொழியை விடுவிக்கும் பணியை நூறாண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்தார். வங்க மொழியில் பாடப்புத்தகத்தை

தொடர்ச்சி 7ம் பக்கம்

## ஹிண்டன்பர்க் அறிக்கை அம்பலம்!

# அதானி குழுமத்தின் அதிவேக வளர்ச்சியும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத் துஷ்பிரயோகமும்

*இவ்வாண்டு பிப்ரவரி இரண்டாம் வாரம் ஹிண்டன்பர்க் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட அறிக்கை பிரதமர் நரேந்திர மோடியும் பாஜக தலைவர் அமித்ஷாவும் அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளதை அம்பலமாகியது. அதானியுடன் தனது நெருக்கத்தையும் மோசடிகளையும் மூடி மறைக்க, உடனே மோடி தனது அரசாங்கத்தின் ‘சாதனைகளை’ பட்டியலிட்டு தற்பெருமை பேசி மக்கள் கவனத்தை திசைதிருப்ப முயன்றார். அதானி நிறுவனம் எப்படி குறைந்த காலத்தில் உலகின் இரண்டாவது பணக்காரர் என்ற இடத்தைப் பிடித்தார் என்பதையும் மக்கள் பணம் அவரது நிறுவனத்திற்கு எப்படியெல்லாம் மடைமாற்றம் செய்யப்பட்டது என்பதையும் அறிந்தால் சாமானிய மனிதன் கொதித்தெழுவது நிச்சயம். இனி ஹிண்டன்பர்க் வெளியிட்ட அந்த வரலாற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.*

### அதானி நிறுவனத்தின் அசுர வளர்ச்சி

*அதானி நிறுவனம், சில பொருளாதார விற்பன்னர்கள் கூறுவதுபோல, அதன் நிதி ஆதாரங்கள் வெளிப்படைத் தன்மையின்றி முறையான பொருளுற்பத்தித் துறைகளின்றி இருந்தபோதிலும், திரு மோடி தலைமையிலான பாஜகவால் ‘தேசிய சாம்பியன்’ ஆக தேர்ந்தெடுக்கப்பட்டு நாட்டின் பல்வேறு முக்கியத் துறைகளில் ஊடுருவிப் பரவ உதவப்பட்டது. அது மட்டுமின்றி, வெளிநாடுகளிலும் காலூன்ற உதவிசெய்தது. நிழல் முதலீட்டாளர்கள், பங்குச் சந்தை முறைகேடுகள் என்ற குற்றச்சாட்டுகள், நேரடியற்ற பரிவர்த்தனைகள் என பல வர்த்தக முறைகளை அதானி நிறுவனம் கடைபிடித்துள்ளது. கடந்த மூன்றாண்டுகள் மட்டுமே அதானி குழும சராசரி வளர்ச்சி **8** மடங்காகும் **(819%)**.*

*அதானி நிறுவனம் ஆரம்பகாலத்தில் குஜராத் காந்திதாம் துறைமுகத்தில் வெறும் பிளாஸ்டிக் கச்சாப் பொருட்களை இறக்குமதி செய்து வந்தது. அந்த வர்த்தகத்தை மேம்படுத்தி தன்னுடைய குஜராத் முந்ரா துறைமுகத்துடனும் குஜராத் முதல்வர் மோடியுடனும் இணைத்து பெருக்கியது. இதனை **2013**ல் வெளிவந்த எக்னாமிக்ஸ் டைம் இதழ் விவரித்துள்ளது. மோடியுடன் கூட்டணி வைத்து தனது வணிகத்தை பன்மடங்கு பெருக்கிக் கொண்டது. பதிலுக்கு, மோடிக்கும் தனது ஆதரவை வெளிப்படையாகவே அதானி நிறுவனம் செய்தது. அன்றிலிருந்து சமீபத்தில் அமெரிக்காவின் ஹிண்டன்பர்க் நிறுவனம் தற்போது அறிக்கை வெளியிட்டபடி, பல்வேறு மோசடிகள் பொருளாதார ஒழுங்குமுறை விதிமீறல்கள் செய்து அசுரவேகத்தில் உச்சிக்குச் சென்றது. இந்த நிறுவனம் ஏராளமாக கடன் வாங்கி, சூழ்நிலை மோசமானால் கட்டாமல் ஏமாற்றிவிடும் என சென்ற ஆகஸ்ட் **2022**லேயே ஃபிட்ச் குரூப் என்ற அமெரிக்க காப்பீட்டு நிதி நிறுவனம் எச்சரித்தது. சென்ற டிசம்பரிலும் கூட குவார்ட்ஸ் என்ற மற்றொரு தகவல் சேகரிப்பு நிறுவனம், அதானி குழுமம் கடனைத் திருப்பிக்கட்டத் தவறினால், பங்குச் சந்தையை மட்டுமின்றி மொத்த இந்தியப் பொருளாதாரத்தையும் பாதித்துவிடும் என எச்சரித்தது. எஸ்பிஐ (SBI) போன்ற அரசுடமை வங்கிகள் மற்றும் எல்ஐசி (LIC) காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்திருக்கும் கோடிக்கணக்கான இந்திய மக்கள், அவ்வங்கிகள் அதானி குழுமத்திடன் தொடர்பில் இருப்பதால், கடுமையாக பாதிக்கப்படுவார்கள் எனவும் அந்த அமெரிக்க ஆய்வு நிறுவனம் எச்சரித்தது. எனவே, முன்பே இது குறித்து எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் மோடி அரசாங்கம் அதானி குழுமத்திற்கு அனைத்து உதவிகளையும் தொடர்ந்து செய்தது.*

### அதானியின் அசுர வளர்ச்சிக்கு மோடியுடனான நட்பே காரணம்

*பாஜக அரசாங்கத்தின் முழு ஆதரவு அதானிக்கு இருப்பதை சாமானியனும் அறிவார். தனது நிறுவனத்தின் இலாபம் அரசாங்கத்தின் நிதிப்பற்றாக்குறையைப் போல் இரு மடங்கு ஆண்டுதோறும் கடந்த **9** ஆண்டுகளாக உயர்ந்து வருவதாக அதானியே கூறியிருக்கிறார். அரசாங்கத்தின் இழப்பீடு அவருக்கு இலாபம்! இந்த இலட்சணத்தில் **5** ட்ரில்லியன் கோடி பொருளாதாரத்தை கொண்டுவரப்போவதாக மோடி அடிக்கடி கூறிவருகிறார். என்னமோ அதுதான் மக்களுக்கு செல்வத்தை வாரி வழங்குவது போல. இதுவரை ஒரு வாக்குறுதியையும் நிறைவேற்றாத பிரதமருக்கு அதானி மட்டும் பாராட்டுகளைக் குவிக்கிறார். உலகத்திலேயே இந்தியா மூன்றாவது பொருளாதார வல்லரசாக **2030**ஆம் ஆண்டிலும் **2050**லும் முதல் நாடாகவும் வரும் என பிரதமரைப் போலவே அதானியும் சில மாதங்களுக்கு முன்பு கூறினார். **2014**ல் மோடி மத்திய அரசாங்கத்திற்கு வந்தாரோ அன்றுமுதல் அதானியின் வளர்ச்சி அசுர வேகத்தைப் பிடித்தது என்பதை அனைவரும் பார்க்கத் தவறவில்லை.*

*கல்லூரியில் தேர்ச்சி பெறாதவர் ஆன அதானி பாலிமர் கச்சாப் பொருட்களை இறக்குமதி செய்து **1985**ல் சிறிய நிறுவனமாக இருந்த அதானியை, குஜராத்தில் **2001**ல் முதல்வராக பதவியேற்றதிலிருந்து மோடி, குஜராத் முந்ராவில் அதிநவீன துறைமுகத்தை அமைப்பதுமுதல், அங்கு சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைத்ததுவரை பல ஒப்பந்தங்களை வழங்கி மிகப்பெரிய நிறுவனமாக அதானியை வளர்த்தார். இந்த துறைமுகத்துக்கு சுற்றுச் சூழல் ஒப்புதல் வழங்கப்படவில்லை. கான்ட்லாரசுத் துறைமுகத்திற்குச் செல்ல வேண்டிய ஒப்பந்தங்கள் முந்ராவிற்கு திருப்பிவிடப்பட்டன. **2014**ல் மோடி மத்திய அரசாங்க அதிகாரத்திற்கு வந்தபோது அதானி நிறுவனத்தின் சொத்து மதிப்பு அமெரிக்க டாலரில் **7** பில்லியன் ஆகும். அதுவரை குஜராத்தில் மட்டுமே வளர்ந்திருந்த அந் நிறுவனம் **2014**க்குப்பின் இந்தியா முழுவதும் பரவத்து வங்கியது. ராணுவத் தளவாடங்களை உள்நாட்டிலேயே தயாரிக்கப் போகிறோம் என மோடி அறிவித்ததும் அதற்குரிய கட்டுமான வசதிகளை அதானி குழுமம் உருவாக்கிக் கொண்டது. மேலும் நாட்டில் மின் உற்பத்தி திட்டங்களையும் எல்அண்டுடி (L&T), லன்கோ (LANCO) ஆகியவற்றிடமிருந்து பெற்றுக்கொண்டது. ஒடிசாவில் தர்மா துறைமுக திட்டத்தை டாடாவிடமிருந்து அபகரித்தது. இன்று நாட்டில் **13** துறைமுகத் திட்டங்களை, கேரளா சிபிஐ(எம்) ஆதரவிலான விழிஞ்ஞும் உட்பட, கையில் வைத்திருக்கிறது. குஜராத் முந்ரா துறைமுகத்தில் சென்ற வருடம் **3000** கிலோ போதைப் பொருளை கைப்பற்றி மிகப்பெரிய போதைப் பொருள் இறக்குமதியை தேசிய புலனாய்வுத் துறை கண்டுபிடித்தது. ஆனால் அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மாறாக, காற்றலை, சூரிய மின்சார பூங்காக்கள், கடன் வழங்கும் வணிகம், மின்சாரப் பகிர்மானம், வானூர்தி, பாதுகாப்புத்துறை என பல துறைகளில் தனது வலையை அதானி குழுமம் விரித்துள்ளது. ஸ்வீடனின் மிகப் பெரிய பாதுகாப்புத்துறை தளவாட நிறுவனமான ஸாப் (SAAB) உடன் ஒப்பந்தம் போட்டு ஆளில்லா விமானத்தை இந்தியாவிற்கு தயாரித்து வழங்கவும் முடிவெடுத்திருக்கிறது. குழாய்வழி இயற்கை எரிவாயுவை நாடுமுழுவதும் எடுத்துச் சென்று கேஸ் பங்குகள் அமைக்க **2018** அக்டோபரில் மட்டும் **126** ஒப்பந்தங்களை அரசாங்கம் அதற்குக் கொடுத்துள்ளது. **2014**ல் **65,600** கோடியாக இருந்த அதானியின் சொத்துக்கள் **2022**ல் **11,48,000** கோடி ரூபாயாக பெருகியுள்ளதற்கு அதானியே மோடிக்கு நன்றி சொல்கிறார்: “இந்தியாவிற்கு எழுச்சியுட்டக்கூடிய தீர்க்கதரசி தலைவர் மோடி. ...ஒவ்வொரு இந்தியனுக்கும் தொடர்புடைய கொள்கைகளில் மட்டுமல்ல திட்டங்களிலும் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளார் மோடி. அவர் தொடாத அரசாட்சியின் அம்சங்கள் அதுவும் இல்லை” என அதானி புகழாரம் சூட்டுகிறார்.*

*மோடியை மட்டுமல்ல, புதிய பொருளாதார தாராளமயக் கொள்கையைப் புகுத்தியதன் மூலம் தான் எப்படி பயனடைந்தேன் என்று காங்கிரஸையும் புகழ அவர் தவறவில்லை. முந்ரா துறைமுகத்திற்கு சுற்றுச்சூழல் விதிமீறலுக்கு அன்றைய காங்கிரசும் உடந்தையாக இருந்து அதானியிடம் பயனடையத் தவறவில்லை. விழிஞ்ஞும் துறைமுகதத் திட்டத்தின் மூலம் தற்போது சிபிஐ(எம்) அரசாங்கமும் தாஜ்பூர் துறைமுகத் திட்டத்தின் மூலம் மேற்கு வங்க திரிணாமுல் அரசாங்கமும் தங்கள் பங்கிற்கு அதானியிடமிருந்து ஆதாயம் தேடிக் கொண்டுள்ளன. ஜார்கண்டில் கோதாவில் விதிகளை மீறி காடுகளில் வசிக்கும் ஆதிவாசிகளை விரட்டி அங்கு மின் உற்பத்தி திட்டத்தை செயல்படுத்த முயற்சிக்கிறது. இலங்கையில் அதானிக்கு மின் நிலையம் அமைக்கும் ஒப்பந்தத்தை வழங்குமாறு கோதபய ராஜபட்சேவிற்கு மோடி பரிந்துரைத்துள்ளார் என இலங்கை எரிசக்தித்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர். அதேபோல மோடி, இஸ்ரேலுக்கு ஒருமுறை சென்று வந்த பிறகு இந்தியா இஸ்ரேல் வணிகத்தின் **90%** அதானிக்கே சென்றதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. மேலும், ஆறு விமான நிலையங்கள் பராமரிப்பு ஒப்பந்தத்தை அதானி குழுமத்திற்கு வழங்க விதிகள் திருத்தப்பட்டன என்ற தகவலும் வெளியாகியுள்ளது.*

*ஆஸ்திரேலியாவில் சுரங்க ஒப்பந்தகளைப் பெற வங்கி மூலதனம் தேவைப்பட்டதால் அரசு வங்கி எஸ்பிஐ (SBI)யின் சேர்மன் அங்கு பறந்து சென்று வந்து உடனே **8900** கோடி ரூபாய் கடன் வழங்கிய விவகாரம் வெளிவந்த செய்தியும் உள்ளது. ஆஸ்த்ரேலியாவில் அங்குள்ள சுற்றுச் சூழல் விதிகளை அதாவது ஆற்று நீரை விதியை மீறி சுரங்கங்கள் பயன்படுத்தப்போவதை மக்கள் எதிர்த்தனர். ஆயினும் பிரதமர் அதானியின் அத்தகைய செயல்களைக் கண்டிக்க வில்லை. முறைகளை மீறி செயல்படும் அதானி குழுமத்தின் வரலாறு இன்னமும் நீள்கிறது. ஆயினும், அதானியிடமிருந்து பிரதமர் கேர் (CARE)க்கு ஏராளமாக நிதி வருகிறது.*

### ஹிண்டன்பர்க் அறிக்கை கூறுவது என்ன?

*ஜனவரி **24, 2023** அன்று ஹிண்டன்பர்க் அறிக்கை வெளியானது. “கார்ப்பொரேட் வரலாற்றிலேயே மிகப்பெரிய மோசடி” என அதானி குழுமத்தை அவ்வறிக்கை வருணிக்கிறது. பங்குச் சந்தை மோசடி, கணக்கு காட்டுவதில் தில்லுமுல்லு, நிதி கையாடல், வெளிநாடுகளில் வழங்கப்படும் வரிச் சலுகைகளை முறைமீறிப் பயன்படுத்துதல் என பல பத்தாண்டுகளாக அதானி குழுமம் அரசாங்க ஆதரவுடன் செய்து வருவதை அந்த அறிக்கை தெளிவாக விளக்கியுள்ளது. அதானி சமர்ப்பித்த அவரது சொத்து மதிப்பான **9,79,800** கோடி ரூபாயில் கடந்த மூன்றாண்டுகளில் மட்டும், பங்குச் சந்தை விலைகளில் மோசடி மற்றும் அவற்றின் சந்தை மதிப்பை செயற்கையாக உயர்த்துதல் மூலம் மட்டுமே ரூபாய் **10,000** கோடி அடைந்திருக்கிறது. அந்த அறிக்கை மொரீஸியஸ் போன்ற, அந்நிய நிதி வரவிற்கு முழு வரிச் சலுகை (Tax havens) அளிக்கும் பல்வேறு நாடுகளில் பல ஷெல் கம்பெனிகளை அதானி நிறுவனம் வைத்திருப்பதை சுட்டிக்காட்டுகின்றது. இந்த கம்பெனிகளில் எவ்வளவு வேண்டுமானாலும் பணம் போடலாம் அதற்கு வரி கட்டத்தேவையில்லை. இறுதியாக அப்பணத்தை அக் கம்பெனி, பொய்யான இன்வாய்ஸ் காட்டும் ஒருவருக்கு முழு பணத்தையும் கடனாகக் கொடுக்கும். கம்பெனிகளில் பணம் போடுபவரும் எடுப்பவரும் பெரும்பாலும் ஒருவரே. இந்தியாவின் கணக்கில் வாரா பணம் அந்நாடுகளில் கம்பெனி துவங்கி போடப்பட்டு கணக்கில் காட்டப்பட்ட முறையான பணமாக மாற்றி இந்தியாவிற்கே மீண்டும் ஒருவரால் கொண்டுவரப்படும். இவ்வாறு தனது சொந்தப்பணம் வெள்ளையாக மறு சுழற்சி செய்யப்படும். செயற்கையாக உயர்தப்பட்ட பங்குகளை வாங்க இந்தப் பணம் பயன்படுத்தப்பட்டு பிறகு இந்திய சந்தையில் விற்று காசாக்கப்படுகிறது. இத்தகைய வரிச்சலுகை*

தொடர்ச்சி 4ம் பக்கம்

## அதானி குழுமத்தின் அதிவேக வளர்ச்சியும் வீழ்ச்சியும்

# முன்பு காங்கிரஸ் அம்பானி குழுமத்தை வளர்த்தது, இன்று பாஜக அம்பானியோடு அதானியையும் சேர்த்து வளர்த்து வருகிறது

*3ம் பக்கத் தொடர்ச்சி*

*முறையீடுகளை மிகப் பெரும் அளவில் செய்துள்ளதாக ஹிண்டன்பர்க் அறிக்கை விளக்குகிறது. மேலும், இக் கம்பெனிகளின் இறுதி சொந்தக்காரர்கள் யார் என்பதைக் கூட ரகசியமாக வைத்திருப்பதாகவும் எடுத்துக்காட்டியுள்ளது. எந்த முறையான டாக்குமென்டுகள் இல்லமலே பணம் வினியோகித்து அதானியின் சிங்கப்பூர் கம்பெனிக்கு மடைமாற்றம் செய்யப்படுகிறது. பொய்யான ஏற்றுமதி இறக்குமதி ஆவணங்களைத் தயாரித்து ஏற்கெனவே பட்டியலில் உள்ள கம்பெனிகளிடமிருந்து மொத்தப் பணத்தையும் வேறு கம்பெனிக்கு மாற்றப்படுகிறது எனவும் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.*

*ஹிண்டன்பர்க் நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக அதானி மிரட்டினார். பதிலுக்கு அந்நிறுவனமும் முடிந்தால் செய்யுங்கள் எனக் கூறி, தான் எழுப்பிய 88 கேள்விகளில் இன்னமும் 62 கேள்விகளுக்கு அதானி குழுமம் பதில் சொல்லவில்லை என கூறியுள்ளது. மிகப்பெரிய அளவில் கடன் வாங்கியிருப்பதாகவும் அதானி குழுமத்தைக் குறித்து அறிக்கை கூறுகிறது 2022–2023 நிதியாண்டில் மட்டும் அதானி குழுமம் வைத்திருக்கும் 2 இலட்சம் கோடி கடனில் வங்கிகளுக்குத் தரவேண்டிய கடன் சுமார் 80,000 கோடி என அறிக்கை கூறுகிறது. மிகப் பெரிய அளவிற்கு இந்திய வங்கிகள் கடன் வழங்கி அதானி குழுமத்திற்கு உதவியிருக்கின்றன. நிலைமை மோசமானால் அக் குழுமம் கடன் பொறியில் சிக்கி, கட்டாமல் போகக்கூடும் என ஃபிட்ச் குரூப் ஆராய்ச்சி நிறுவன அறிக்கையும் சுட்டிக் காட்டுகிறது.*

*முன்பு ஹர்ஷத் மேத்தா பங்குச் சந்தை ஊழலில் அவருக்கு உதவிய கேதான் பராக் அதானிக்கும் பங்குச் சந்தையில் முறைகேடுகள் செய்ய ஆலோசகராக செயல்பட்டுள்ளார். அதானியின் 14 தனியார் நிறுவனப் பங்குகள் கேதான் பராக் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டு பங்குச் சந்தையில் ஊக வணிகத்திற்குத் திருப்பப் பட்டதாக ஹிண்டன்பர்க் அறிக்கை கூறுகிறது. மேலும், அதானியின் நெருங்கிய உறவினர், பங்குச் சந்தை ஒழுங்குமுறை வாரியத்தில் உறுப்பினராக இருக்கிறார் என்ற விவரத்தையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. அவர் பங்குகள் விலை எப்படி மாறும் என்ற தகவலை முன்கூட்டியே ரகசியமாக அதானிக்குத் தெரிவிக்கிறார்.*

*ஹிண்டன்பர்க் அறிக்கையைத் தொடர்ந்து ஃபிரான்சின் டோடல் எனர்ஜி அதானிக்கு வழங்கிய ஹைட்ரஜன் ஒப்பந்தத்தை நிறுத்தி விட்டது. ஜப்பானின் நமுரா ஹோல்டிங்ஸ், மிட்ஷுயி நிறுவனங்களும் அதானி குழுமத் தொடர்புகளிலிருந்து பின்வாங்கத் தொடங்கி விட்டன. ஆனால் நமது அரசாங்கமும் ஒழுங்கு முறை ஆணையங்களும் எந்த நடவடிக்கையையும் எடுக்க வில்லை. குற்றவியல்துறை (CBI), என்ஃபோர்ஸ்மென்ட் டைரக்டரேட் (ED) ஆகியவை இன்னமும் செயல்படவில்லை. நிதி அமைச்சர், நமது ரிசர்வ் வங்கியும் பங்குச் சந்தை ஒழுங்குமுறை வாரியம் செபியும் (SEBI) எச்சரிக்கையுடன் இருப்பதாக அறிக்கை வெளியிட்டதுடன் சரி. ஆக, பாஜகவின் மௌனம் மிகப் பெரிய மெகா மோசடி நடந்திருப்பதை உறுதி செய்வதாகத் தோன்றுகிறது.*

### அதானி சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி

*ஊழல் செய்து உயர உயரப் பறக்கும் எதுவும் படுபாதாளத்தில் வீழ்வது நிச்சயம். ஹிண்டன்பர்க் அறிக்கை வெளியான அடுத்த நாளே, அதானி பங்குகள் 50% சந்தையிலிருந்து துடைத்து எறியப்பட்டன. அதன் நஷ்டம் 9,84,000 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டது. மேலும், அதானி விடுத்த பாலோ ஆன் பப்ளிக் ஆஃபர் திறிளி பங்குகள் 3%கூட விற்கவில்லை. எனவே ஸ்டேட் வங்கியின் லைஃப் இன்சூரன்ஸ், எல்ஐசி ஆகியவை அவற்றை வாங்க முன்வந்தன. இதனால் அவையும் தலா சுமார் 30,000 கோடி ரூபாயை இழந்தன. அரசாங்கம் விழிப்புடன் இருக்கிறது ஆர்பிஐ எச்சரிக்கையுடன் செயல்படுகிறது என்றால் இவை எப்படி சாத்தியமாகும்? ஆளும் கட்சி பாஜகவும் பிரதமர் மோடியும் ஒப்புதல் அளிக்காமல் இது எப்படி நடக்கும்? இது எஸ்பிஐ, எல்ஐசி ஆகிய அரசு வங்கிகளில் சேமித்து வைத்திருக்கும் பல கோடி சாமானிய இந்தியர்களை இது பாதிக்காதா? இதுபோக, பங்குச் சந்தையில் முதலீடு செய்திருக்கும் நடுத்தர மக்களின் நஷ்டம் சுமார் 4.18 இலட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் மூன்றாம் இடத்தில் இருந்த அதானி இப்போது ஜனவரி 24 நிலையின்படி 16ஆம் இடத்திற்கு வந்துவிட்டது.*

### அரசாங்கம்–தொழிலதிபர் ஊழல் கூட்டை விழிப்புணர்வு கொண்ட மக்கள் முறியடிக்க வேண்டும்

*இன்று இந்தியா “ஏகபோகங்களால் ஏகபோகங்களுக்காக ஏகபோகங்களின்” அரசாங்கமாக மாறிவிட்டது. இலஞ்சம் ஊழல் முறைகேடுகள் ஏமாற்றுக்கள், பொதுநிதிச் சுருட்டல்கள் என எல்லா மோசடிகளும் நிறைந்ததாக முதலாளித்துவ அமைப்பு மாறிவிட்டது. தொழிலதிபர்களுடன் கட்சிகள் கூட்டணி வைப்பதும், தனக்காக சேவை செய்யும் கட்சியை ஆதரித்து அதை ஆட்சியில் தொழிலதிபர்கள் அமர்த்துவதும் வாடிக்கையாகி விட்டது. முன்பு காங்கிரஸ் ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்து ஜனாதிபதியான பிரணாப் முகர்ஜி, அம்பானியை மிகப் பெரிய தொழிலதிபராக உருவாக்கியதில் முக்கியப் பங்கு வகித்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. பின்னால், பல்வேறு மெகா ஊழல்களால் மக்களிடம் மதிப்பிழந்துவிட்டதால் காங்கிரசைத் தவிர்த்து பாஜகவிற்கு தனது ஆதரவை அம்பானி வழங்கத் துவங்கினார். பாஜக வும் தனது விசுவாசத்தை அம்பானிக்கும் அதானிக்கும் காட்டிக்கொண்டிருக்கிறது. ராஃபெல் விமானம் வாங்கும் ஒப்பந்தத்தை அதிக விலைக்குப் போட்டு, அதிலிருந்து வந்த பணத்தை ஃபிரான்ஸ் நாட்டு டசால்ட் விமான நிறுவனத்துடன் அம்பானியின் ரிலையன்ஸ் ஏரோஸ்ட்ரக்சரை ஒப்பந்தம்போட மோடி அரசாங்கம் உதவியது. நமது நாட்டில் மட்டுமல்ல உலகமுழுதும் ஏகபோக முதலாளித்துவ நாடுகளில் இதுதான் நடக்கின்றது. அமெரிக்காவில் உக்ரைன் போரில் காலியாகும் ஏவுகணைகளைத் தயாரித்து வழங்கும் ஒப்பந்ததத்தை மிக பெரிய ராணுவ கான்ராக்ட் நிறுவனம் லாகீத் மார்டினனுக்கு வழங்கியுள்ளனர். இந்தப் போரில் காலியாகும் தளவாடங்களை உற்பத்திசெய்து தேவையை நிரப்ப 2 பில்லியன் டாலர் ஒப்பந்தங்களை ரதியான் டெக்னாலஜிஸ்ட் என்ற ஒரே கம்பெனிக்கு அமெரிக்க அரசாங்கம் வழங்கியிருக்கின்றனது. ஐக்கியக் குடியரசிலும் (UK) பாதுகாப்பு ஒப்பந்தங்களை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கிவருகின்றனர். ஃபிரான்ஸ் அரசாங்கத்தின் ராணுவத் தளவாட உற்பத்தியை தொடர்ந்து சில நிறுவனங்களே பெற்றுவருகின்றன. இந்த ஏகபோக நிறுவனங்கள் பொதுப்பணத்தில் மிகப் பெரிய இலாபத்தை ஈட்டி வருகின்றன. பதிலுக்கு அரசாங்கத்தில் ஆளும் கட்சிகளுக்கு தேர்தல் நிதி வழங்குவது, ஊடக பரப்புரை உட்பட அனைத்து உதவிகளையும் ஏகபோக நிறுவனங்கள் செய்கின்றன.*

*உலக முதலாளித்துவ ஏகாதிபத்தியப் பொருளாதாரம் தனக்கே உரித்தான இலாப நோக்க விதியைப் பின்பற்றி இந்த நிலைக்கு இன்று வந்துள்ளன. அதிவேகமாக வளர்ந்து மக்கள் பணத்தைச் சூறையாடும் அசுர ஊழல் நிறுவனங்களிலிருந்து விடுபட மக்கள் விழிப்புணர்வு பெற்று ஒன்றிணைய வேண்டும். வெறும் விசாரணைக் கமிஷன்கள் இன்றைய கேடுகெட்ட முதலாளித்துவ அமைப்பில் எந்தப் பலனையும் தராது. ஜனநாயக எண்ணம் கொண்ட மக்கள் சமுதாயத்தில் ஊழல் முறைகேடுகள் நடக்கமுடியாதா ஒரு சூழ்நிலையை போராட்டங்களின் மூலம் உருவாக்க வேண்டும். கடும்பாடு பட்டாவது மக்கள் இதைச் செய்யவில்லை என்றால் அதானி போன்றோர்கள் மிகப் பெரிய அதிகாரத்துடன் ஊதிப் பெருத்து அவர்களின் ஆதரவில் ஆட்சி செய்யும் கட்சிகள் மக்களை அடக்கி ஒடுக்குவது தீவிரமாகும். எனவே, விழிப்புணர்வுடன் மக்கள் இயக்கங்களை வளர்த்தெடுத்து சுதந்திர ஜனநாயகச் சூழலை நாட்டில் எப்பாடுபட்டாவது உருவாக்க அனைவரும் முன்வர வேண்டும்* ■


**பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்களின் பிறந்த நூற்றாண்டையொட்டி தமிழில் வெளியிடப்பட்ட படைப்புக்கள்**

- **மொழிப் பிரச்சினை**
- **கம்யூனிஸ்ட் நடத்தை நெறி**
- **மார்க்சிசமும் மனித சமுதாயத்தின் வளர்ச்சியும்**
- **இந்தியாவில் கலச்சார இயக்கமும் நமது கடமைகளும்**
- **மார்க்சிச அறிவியல் ஓர் அறிவியல்பூர்வ இயக்கயியல் முறையியல்**
- **விவசாயிகள் வாழ்வாதாரப் பிரச்சினைகள்**



**DECLARATION**

Statement about ownership and other particulars about the newspaper PAATTALI CHINTANAI to be published in the first issue after last of February

**FORM IV (SEE RULE 8)**

| | |
|---|---|
| Place of Publication: | New No16, Old No18, Rotler Street, Choolai Chennai 7 |
| Periodicity of its Publication : | Monthly |
| Printer's Name : | A Rengasamy |
| Nationality : | Indian |
| Address : | New No16, Old No18, Rotler Street, Choolai Chennai 7 |
| Publisher's Name : | A Rengasamy |
| Nationality : | Indian |
| Address : | New No16, Old No18, Rotler Street, Choolai Chennai 7 |
| Editor's Name : | A Rengasamy |
| Nationality : | Indian |
| Address : | New No16, Old No18, Rotler Street, Choolai Chennai 7 |

Name and address of Individuals who own the newspaper and partners of shareholders holding morethan one percent of the total capital.

**SOCIALIST UNITY CENTRE OF INDIA (COMMUNIST)**

**TAMILNADU STATE ORGANISING COMMITTEE**

I, A Rengasamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

March 1, 2023

**A Rengasamy**

Signature of Publisher

## கம்யூனிச சித்தாந்தத்தை உயர்த்திப்பிடிப்போம்!

# போராட்ட வாழ்க்கையில் புரட்சியாளர்கள் அனுபவிக்கின்ற அமைதியையும், மகிழ்ச்சியையும், வசதியான, பாதுகாப்பான வாழ்க்கை வாழ்வோரால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது

1ம் பக்கத் தொடர்ச்சி

வாழத் தொடங்குகிறீர்கள் என வைத்துக் கொள்வோம். நீங்கள் இதை ஒரு தியாகச்செயல் என்று கருதுவீர்களா? யாரும் அப்படிக் கருத மாட்டார்கள். நீங்களும் அப்படிக் கருதமாட்டீர்கள். தியாகம் என்பது பிரதிபலனாக எதையும் எதிர்பார்க்காமல் அனைத்தையும் கொடுப்பதாகும்.

ஆனால் இங்கு இதுவா நிலைமை? உண்மையில் கம்யூனிஸ்ட் வாழ்க்கையை ஏற்றுக் கொண்டதன் மூலம் நீங்கள் இழந்ததைவிட அதிகமாகப் பெற்றுக்கொண்டீர்கள். அரச வாழ்க்கையைவிட தங்களது புரட்சிகரவாழ்க்கை மிகவும் விலை மதிப்பற்றது என கம்யூனிஸ்டுகள் கருதுகின்றனர். ஒரு புரட்சியாளனுக்கு தான் விட்டுவிட்டு வந்த வாழ்க்கை அசிங்கமான, துன்பகரமான வாழ்க்கை மட்டுமல்ல. அது இருட்டு குடிசை வாழ்க்கை போல சிறுமையான, குறுகிய மற்றும் அவமானத்தைத்தரும் வாழ்க்கையும் ஆகும். ஆக, இந்த கோணத்திலிருந்து பார்த்தால் ஒரு உண்மையான புரட்சியாளன் எதையுமே தியாகம் செய்யவில்லை. தான் விட்டு விட்டு வந்த, ஒரு வீடு, ஒரு கார், பணம், சாதனங்கள், சொத்து, செல்வம், சொகுசு என்றவற்றிற்கு பதிலாக அதைவிட லட்சோப லட்சம் மடங்கு பெரிதான ஒன்றை அடைந்து, அவர் தனது கௌரவத்தை பெற்றுக்கொண்டு விட்டார். புரட்சியாளர்கள் சந்திக்கவேண்டிய ஆயிரக்கணக்கான துன்பங்களும், அடக்கு முறைகளும், அடிப்படைத் தேவைகளும், கடின வாழ்வும், சாதாரண மக்களுக்கு மிகவும் துன்பம் மிக்கதாக தோன்றலாம். ஆனால் இடைவிடாத போராட்டங்களில், வெளிப்பார்வையில் துன்பகரமானதாக தோற்றமளிக்கும் வாழ்க்கையில் மூழ்கியிருந்தாலும் கூட புரட்சியாளர்கள் அனுபவிக்கின்ற அமைதியையும், மகிழ்ச்சியையும், வசதியான, பாதுகாப்பான வாழ்க்கையை வாழ்வோரால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது. ஆக, புரட்சியின் நலனுக்காக, ஒரு புரட்சிகர வாழ்க்கையை மேற்கொள்ளும் போது எதை இழந்து விட்டு வந்தாலும், தனது உயிரையே இழந்தாலும்கூட ஒரு புரட்சியாளர் அதைத் தியாகம் எனக் கருதுவதில்லை.

இவ்வாறு இருந்திருக்கவில்லையெனில், தாங்கள் விட்டுவிட்டு வந்தவைகளின்மேல் சிறிதளவு ஆசையோ, பற்றோ, கொண்டிருந் திருப்பார்களெனில் சீனப்புரட்சியாளர்கள் நீண்ட வருடங்களாக சமவெளிகளிலும், மலைப்பிரதேசங் களிலும் மரணத்தை துச்சமாக்கி போராட்டங்களை நடத்தியிருக்க முடியாது. புரட்சிகர வாழ்க்கை யானது மிக உயர்ந்த கௌரவ மதிப்புணர்வுகளை, மகிழ்ச்சியை கொண்டிருப்பதைக் கண்டிருக்கா விட்டால் வியட்நாம் புரட்சியாளர்கள் இப்படிப் பட்ட சக்திமிக்க வல்லரசை எதிர்த்து இரவும் பகலும், தினசரி, ஆண்டுக்கு ஆண்டு என தொடர்ந்து இரத்தக்களரி நிறைந்த போராட்டங் களை நடத்துவதற்கான மன வலிமையை, நம்பிக்கையை எங்கிருந்து பெறுகின்றனர்?

### ஏதாவது பிரதிபலனை எதிர்பார்க்கும் ஆசை துறவு சித்தாந்தத்தில் பொதிந்திருக்கிறது

புரட்சிகர வாழ்க்கையின் மீதான ஆர்வம் ஒருவரிடம் மிகப்பெரும் சக்தியாக வளரும் போதுதான் அவரால் ஒரு புரட்சியாளனாக ஆக முடியும். ஆனால் மிக விநோதமாக நம் நாட்டில் கம்யூனிஸ்ட் என்றழைக்கப்படுவோர் எதையாவது விட்டுவிட நேரும்போதெல்லாம் அதை மிகப் பெரும் தியாகமாகக் கருதுகின்றனர். அவர்கள் எதை விட்டு விட்டனர்? சொத்து, கார், செல்வம் அல்லது வசதி இதைத் தவிர வேறென்ன? இந்த அர்த்தத்தில் நமது நாட்டு காந்தியவாதிகள் அதிகத் தியாகங்கள் புரிந்திருக்கின்றனர். ஆனால் தம்மை



சிப்தாஸ் கோஷ்

கம்யூனிஸ்ட் எனக்கூறிக் கொள்வோர் இதை எப்படி தியாகம் எனக் கருதுகின்றனர்? ஒரு சாதாரண மனிதனுக்கு மிக முக்கியமானதாக இருக்கின்ற வாழ்க்கை தேவைகளெல்லாம், புரட்சிகர லட்சியத்தால் உந்தப்படுகின்ற ஒரு உண்மையான புரட்சியாளனுக்கு முக்கியத்துவமற்ற ஒன்றாக மாறிடும்போது, புரட்சியின் நலனுக்காக அனைத்தையும் விட்டுவிட்டவர், தன் வாழ்க்கையை அர்ப்பணித்து விட்டவர் என்ற அர்த்தத்தில் மக்கள் அவரை சுயதியாகம் செய்து விட்ட துறவி போன்று எண்ணுகின்றனர் என்பது உண்மைதான்.

ஆனால் கம்யூனிஸ்டுகள் ஏன் அதனை தியாகம் என எடுத்துக்கொள்ளவேண்டும்? அப்படியெனில் சொத்தும், காரும் செல்வமும் வசதியும் புரட்சியை விட மிகவும் விலை மதிப்பற்றது என்று அவர்கள் கருதுகின்றனர் என்று அர்த்தமாகாதா? அவர்கள் இதயத்தின் அடிஆழத்தில் இவற்றின் மீது மிகப்பெரும் ஆர்வத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் இதற்குப்பொருளாகும். ஆக செல்வம், சொத்து அல்லது அதிகாரம், பதவி என்று பிரதிபலனாகப் பெற்றுக் கொள்ளும் ஆசையின் ஊற்றுக்கண் நாட்டிற்காக பெரும் தியாகங்கள் புரிந்துவிட்டோம் என்ற எண்ணத்திலிருந்தே துவங்குகிறது. நமது நாட்டில் கம்யூனிஸ்ட் என்றழைக்கப்படுவோரும்கூட தங்களின் தியாகத்திற்குப் பிரதிபலனாக எதையாவது எதிர்பார்க்கின்றனர். அவரது துறவறம் நாட்டின் மீது பெரும் சுமையாகி விட்டது.

சொத்து மற்றும் செல்வங்களுக்குப்பின்னால் ஓடாமல் அதிகாரம், பதவிமோகம் கொஞ்சமும் கொண்டிராத நம்நாட்டு காந்தியவாதிகளின் கதி என்னவாயிற்று? அவர்கள் சொத்து, செல்வம், அதிகாரம், பதவி போன்றவற்றிற்கு ஏங்கா தவர்கள் என்ற அர்த்தத்தில் விதிவிலக்குகளாய் இருந்தாலும்கூட விரக்தியடைந்தவர்களாய், எதிலும் குறை காண்பவராய், மனித முயற்சிகளின் மீது அனைத்து நம்பிக்கையையும் இழந்தவர்களாய் ஆகிவிட்டனர். அதாவது தனது வருங்காலத்தை வடிவமைத்துக் கொள்வதற்கான மனிதனின் போராட்டத்தின் மீதும், ஏன், மனிதனின் மீதே அனைத்து நம்பிக்கையையும் இழந்து செயலற்றவர்களாகிவிட்டனர்.

ஆக தியாகம் குறித்த வழிபாடு ஒருவரை இந்த இரண்டு எல்லைகளில் ஏதாவது ஒன்றுக்கு இட்டுச் சென்றே தீரும். ஒன்று ஏதாவது ஒரு வடிவத்தில் பிரதிபலனை எதிர்பார்க்கும் ஆசையை உருவாக்கும் அல்லது காலப்போக்கில் சிக்கல் மிகுந்த போராட்டங்களில் தோல்வியை சந்தித்து வாழ்க்கையில் தாம் மிகவும் விரும்பிய வெற்றியைப் பெற முடியவில்லையெனில் விரக்தியில் மூழ்கி மனித முயற்சிகளின் மீது அனைத்து நம்பிக்கையையும் இழந்து இறுதியாக போராட்டங்களையே வெறுக்கும் நிலைக்கு ஒருவர் சென்றுவிடுகிறார்.

...அதனால்தான் நான் மீண்டும் வலியுறுத்து கிறேன். தியாகம் குறித்த சரியான மார்க்சிச கோட்பாட்டை பெற்றிருக்காவிட்டால், சொத்து, செல்வம், அதிகாரம், பதவி என்பவைகளுக்கு ஏங்காதவர்களாதிருப்பினும் கூட அவர்கள் எப்படியாகியிருக்கின்றனர் என்பதைப் பாருங்கள். இறுதியாக விரக்தியடைந்தோராய், எதிலும் நம்பிக்கையற்று குறை காண்போராய், மனித முயற்சிகளின் மீது அனைத்து நம்பிக்கையையும் இழந்தோராய் ஆகிவிடுகின்றனர். புரட்சியாளர்கள் நம்புகின்ற சித்தாந்தம் துறவி சித்தாந்தம் அல்ல என்பதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். அதனால்தான் நாம் எதையும் தியாகம் செய்துவிட வில்லை என கூறினேன்.

...அதே சமயம் கந்தல் துணிகளை அணிவதும் சேரிகளில் வாழ்வதும் பாட்டாளிகளின் லட்சியமாக ஒரு போதும் இருக்க முடியாது. இவையெல்லாம் அவர்களின் வாழ்க்கையில் முதலாளித்துவ சுரண்டலின் தவிர்க்க முடியாத விளைவுகளேயன்றி வேறொன்றுமில்லை என்பதை நாம் மறந்துவிடுகிறோம். ஆக ஒருபுறம் முதலாளித்துவச் சுரண்டல் எந்திரத்தால் நசுக்கப்பட்டு, மறுபுறம் முறையான கல்வியின்றி மேலும் மோசமான முதலாளித்துவ கலாச்சாரத் தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருப்பதால் தங்களது வாழ்க்கைத் தரத்தில், கலாச்சாரத்தில், அறநெறி களில் அவர்கள் பிரதிபலிக்கின்றவை எல்லாம் புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கலாச்சாரம் ஆகாது. உண்மையில் அவர்கள் இப்படிப்பட்ட வருந்தத்தக்க நிலைமைக்கு தள்ளப்பட்டிருக் கின்றனர். உயர்ந்த சித்தாந்தத்தின், கலாச்சாரத் தின், அறநெறியின் மற்றும் மதிப்புணர்வுகளின் அடிப்படையிலான, உன்னதமான உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைவதற்காக, முதலாளித் துவத்தைத் தூக்கியெறிவதற்கான போராட்டமே அவர்களின் போராட்டமாகும்.

தியாகத்தின் மொத்த உருவத்தைப்போன்று கந்தலாடை உடுத்தி தொழிலாளர்களிடம் செல்வதின் அர்த்தம் என்ன? உங்களிடம் நல்ல ஆடைகள் இல்லையெனில் இருப்பதை அணிந்து செல்லுங்கள். நல்ல ஆடைகள் வைத்திருக்கும் போது அதை விட்டு விட்டு கந்தலாடைகளை அணிந்துசெல்லும் பொய்மை எதற்கு?

நமது நாட்டு சாதாரண மக்களிடம் இருக்கின்ற தவறான எண்ணத்திற்கு இந்த பொய்மையே முக்கியக் காரணமாகும். அவர்கள் நுணுக்கமான ஆய்வுகளிலெல்லாம் இறங்குவதில்லை. மாறாக, தன்னிடமிருந்த அனைத்தையும் அரசியலுக்காக, கட்சிக்காக உண்மையிலேயே விட்டு விட்ட ஒரு தலைவர் சூட் ஆடை அணிந்திருப்பதை மக்கள் பார்த்து விட்டால், அந்த சூட் ஆடை அவருடைய தாக இல்லாமலிருந்தாலும், அவருடைய தனிப்பட்ட சொத்தாக இல்லாமலிருந்தாலும், அந்த சூட் ஆடை ஒரு நண்பரால் அன்பளிப்பாக கொடுக்கப்பட்டிருந்தாலும் அல்லது கட்சியின் ஒரு அனுதாபி வழங்கியிருந்தாலும், குளிர்காலம் முழுவதிலும் வெளியில் செல்ல அவரிடம் இருப்பது இந்த ஒரு ஆடை மட்டுமே என்றாலும் கூட, மக்கள் அவரை ஒரு செல்வந்தர், பணக்காரர் என்று எண்ணிக்கொள்கின்றனர். அவசியத்தின் காரணமாகக்கூட ஒரு தலைவர் காரில் பயணம் செய்தால், நல்ல ஆடை அணிந்தால் போதும் மக்கள் உடனே எல்லாம் முடிந்து விட்டது, இந்தத் தலைவர் மக்களையும், நாட்டையும் இப்போதெல்லாம் நேசிப்பதில்லை என்று பொதுவாக நம்பிவிடுகின்றனர்.

வேறு சில தலைவர்களும் இருக்கிறார்கள். இவர்கள், இவையெல்லாம் மக்களிடம் நிலவும் முன் அபிப்பிராயங்கள் என ஒதுக்கிவிட்டு, சில சர்வதேச கம்யூனிஸ்ட் தலைவர்களை சுட்டிக்

தொடர்ச்சி 6ம் பக்கம்

## கம்யூனிச சித்தாந்தத்தை உயர்த்திப்பிடிப்போம்!

# தலைவர்கள் உண்மையிலேயே பொது மக்களுக்கு சேவை செய்வார்களெனில், மக்களே அவர்களைக் கவனித்துக் கொள்வார்கள்

5ம் பக்கத் தொடர்ச்சி

காட்டி இந்த வசதிகளையெல்லாம் வழங்கிட கட்சியை நிர்ப்பந்திக்கிறார்கள். வெகுஜனங்களுக்கும் கட்சிக்கும் வசதி இருக்கிறதா என்றெல்லாம் சிறிதும் கவலைப்படாமல் கார்களைப் பயன்படுத்திக் கொண்டும் ஆடம்பர வீடுகளில் வாழ்ந்துகொண்டும், விலை உயர்ந்த ஆடைகளை அணிந்து கொண்டும் திரிகின்றனர்.

### ஒரு புரட்சியாளர் வசதியின்மைக்காக வருத்தமடைவதோ, வசதி கிடைத்தால் அதன்மேல் பற்றை வளர்ப்பதோ இல்லை

இவை எதுவுமே சரியான புரட்சிகர மனப்பான்மை அல்ல. இக்கேள்விகளுக்கெல்லாம் சரியான புரட்சிகர அணுகுமுறைதான் என்ன? புரட்சியின் நலனுக்காக தன் வாழ்க்கைக் குறித்த அனைத்து கேள்விகளையும் ஒரு புரட்சியாளன் தானே முன்வந்து மனமகிழ்வோடு கட்சியிடமும் மக்களிடமும் விட்டு விடுகிறான். கட்சியால் கொடுக்க முடிந்த வாழ்க்கைத் தரத்தை எந்த ஒரு வருத்தமுமின்றி மிகவும் மகிழ்வுடன் அவன் ஏற்றுக்கொள்கிறான். இதையெல்லாம் அவன் பொருட்படுத்துவதேயில்லை. நாள் ஒன்றுக்கு இரண்டுவேளை உணவைக்கூட கட்சியால் வழங்க முடியவில்லையெனில் அதனை தானே ஏற்பாடு செய்து கொள்வான் அல்லது எந்த வருத்தத்தையும் தனக்குள் வளர்த்துக் கொள்ளாமல் உணவின்றியே மகிழ்வோடு பணிபுரிவான். ஒரு கம்யூனிஸ்ட் புரட்சியாளனுக்கு இதுவே ஒரு உண்மையான சோதனையாகும்.

அதேபோல் ஒரு நல்ல ஆடையை, தேவைப்படும்போது கட்சியால் கார் வழங்க முடியும்போது இவற்றின்மேல் அவர் எந்த பற்றுதலையும் வளர்த்துக் கொள்ளக்கூடாது. அவர் எக்கணமும் வசதியின் வழிபாட்டுக்கு பலியாகிவிடக் கூடாது. தேவையேற்பட்டால் எந்த ஒதுக்கீடுமின்றி எந்தநேரத்திலும் அவர் அனைத்தையும் விட்டுவிட வேண்டும். வசதிகள் இல்லாதபோது அவர் எப்படி வருத்தத்தை வளர்த்துக்கொள்ள மாட்டாரோ, வெறுப்பு கொள்ளமாட்டாரோ அதேபோல் இவை யெல்லாம் கிடைத்தாலும் கூட இவற்றின்மேல் எந்தப் பற்றுதலையும் வளர்த்துக்கொள்ளமாட்டார் என்பதே இதன் பொருளாகும்.

...பொதுவாக மக்கள் தாங்களாகவே தங்கள் தலைவர்களை கவனித்துக் கொள்கின்றனர். இவ்வாறிருக்கும்போது தலைவர்கள் வசதிக்காக ஆசையை, ஏக்கத்தை ஏன் கொண்டிருக்க வேண்டும்? ஒரு தலைவரைப்பற்றி மக்கள் நல்லுணர்வை கொண்டிருக்கவில்லையெனில் அவர் ஒரு ஒட்டுண்ணியைப்போன்று, மேலிருந்து திணிக்கப்பட்ட ஒரு தலைவர் என்றே அதற்குப் பொருளாகும். தலைவர்கள் உண்மையிலேயே பொது மக்களுக்கு சேவை செய்வார்களெனில், அவர்களும்கூட தாங்களாகவே தலைவர்களைக் கவனித்துக் கொள்வார்கள்.

ஆனால் இதைக்குறித்து தலைவர் விழிப்புணர்வோடு இல்லாவிட்டால் என்ன நடக்கிறது? இவற்றையெல்லாம் அவர் பெற்றுக்கொண்டேயிருந்தாலும் இந்த வசதிகளின் மேல் அனைத்து விதமான பற்றுதல்களிலிருந்தும் அவர் தன்னை விடுவித்துக்கொள்ளாவிட்டால் ஒருநாள் அதற்குப்பலியாகிவிடுவார். இதுதான் உண்மையான பிரச்சினையாக ஆகிவிடுகிறது. ஒரு சமயம் அவரால் முற்றிலும் வசதியற்ற நிலையை எந்த முணுமுணுப்புமின்றி ஏற்றுக்கொள்ள முடிந்தது என்ற அந்தக் காரணத்தினாலேயே தன் வாழ்க்கை முழுவதும் அந்த குணாம்சத்தை அவரால் காப்பாற்ற முடியும் என்று பொருளாகிவிடாது. எனவே ஒரு புரட்சியாளர் தனக்குள்ளாக தொடர்ச்சியான போராட்டத்தை நடத்த வேண்டும்.

...வெகுஜனங்களின் மத்தியில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? மக்களை விட்டு வெகுதூரம் முன்னால் ஓடிவிடவும் கூடாது அதே சமயம் அவர்களுக்குப் பின்னால் தொய்ந்து விடவும் கூடாது. அதாவது, மக்களுடனேயே இருக்க வேண்டும் என்பதில் எந்த சந்தேகமு மில்லை. ஆனால் வெகுஜனங்களின் சிந்தனையில் பூர்ஷ்வா வர்க்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற தவறான கருத்துக்களையும் பலவகைப்பட்ட குழப்பங்களையும் நம்முடைய நடத்தையின், நடை உடை பாவனைகளின் மூலம் முற்றிலும் ஒழித்துக்கட்டுவதற்காக அவர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்காகவே நாம் மக்களுடன் இருக்க வேண்டும்.

விநோதமான குழப்பங்களும், மோசமான பூர்ஷ்வா கலாச்சாரத்தின் ஆதிக்கமும் வெகுஜனங்களின் மனதில் ஊடுருவி அவர்களின் சிந்தனைச் செயல்முறைப்போக்கையே வடிவமைக்கிறது. அது மெல்லிய சிலந்திவலையைப் போல அவர்களின் கண்ணோட்டத்திலும் ரசனையிலும் பரவியிருக்கிறது. இவற்றையெல்லாம் வெறும் புரட்சிகர கோஷங்கள் மூலம் நீக்கிவிட முடியாது. இவற்றையெல்லாம் ஒழித்துக் கட்டுவதற்கு மக்களை புரட்சிகர இயக்கங்களுக்குள், அரசியல் மற்றும் பொருளாதார போராட்டங்களுக்குள் கொண்டு வந்து ஈடுபடுத்த வேண்டும் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

ஆனால் நமது முன் உதாரணங்களின் மூலம் அவர்களை முதலாளித்துவ கலாச்சாரத்தின் ஆதிக்கத்திலிருந்து ஒவ்வொரு சிறு அம்சத்திலும், கலாச்சார ரீதியில் நம்மால் விடுவிக்க முடிந்தால் மட்டுமே இதனை முற்றிலுமாக சாதிக்க முடியும். அப்போது மட்டுமே பூர்ஷ்வாக் கலாச்சாரத்தின் ஆதிக்கம், சன்யாசிகளின் மீதான பற்றுதல் மற்றும் தியாகம் மீதான உணர்வுகளெல்லாம் சரியத் தொடங்கும். இவற்றின் உண்மையான வர்க்கக் குணாம்சத்தை மக்கள் ஊடுருவிப் பார்க்கும் திறனைப் பெறுவார்கள். உண்மையிலேயே அர்ப்பணித்துக் கொண்டவர் யார், உண்மையிலேயே லட்சிய பூர்வமானவர் யார், சரியான சித்தாந்தம் எது, சரியான அடிப்படை அரசியல் பாதை எது, தங்களின் விடுதலைக்கான வழி எங்கேயிருக்கிறது என்பதையெல்லாம் அவர்களால் உணர்ந்தறிய முடியும்.

அவர்கள் இதை உணரமுடியும் நாளில், இவற்றையெல்லாம் அவர்கள் எந்த அளவிற்கு கிரகித்துக் கொள்கிறார்களோ அந்த அளவிற்கு பூர்ஷ்வாக் கலாச்சாரம் மற்றும் பூர்ஷ்வா அரசியல் செல்வாக்கு குறைந்து போகும். நாடகமாடும் புரட்சியாளர்களின் செல்வாக்கு மேன்மேலும் மறைந்து போகும். ஆக மக்களிடம் நாம் புரட்சிகர அரசியலைக்கொண்டு செல்ல வேண்டும். ஆனால் அதோடு முதலாளித்துவ கலாச்சாரத்திற்கு எதிராக அறப்போர் மனப்பான்மையோடு பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தையும் சேர்த்து நாம் கொண்டு செல்ல வேண்டும்.

ஆனால் நம் நாட்டில் கம்யூனிஸ்ட் தலைவர்கள் என்றழைக்கப்படுவோர் இதைப்பற்றி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தாததோடு அதற்கு மாறாக தங்களுடைய நடை உடை பாவனைகள் மற்றும் நடத்தையின், வேஷதாரித்தனத்தின் மூலம் அவர்கள் யதார்த்தத்தில் மக்களிடம் சீர்தூக்கிப் பார்க்கும் முறை, கலாச்சாரம் மற்றும் அறநெறிகளின் மீது கோரப் பிடியுடன் கூடிய பூர்ஷ்வா சித்தாந்தத்தின் ஆதிக்கமானது தொடர்ந்து நீடித்திருக்கவே உதவுகின்றனர். மக்கள் மீது பூர்ஷ்வா கலாச்சாரத்தின் ஆதிக்கம் தொடர்ந்து நீடித்திருக்குமானால், பொருளாதாரப் பிரச்சினைகளில் போர்க்குணமிக்க போராட்டங்கள் நடத்தப்பட்ட போதும்கூட புரட்சிகரக் கண்ணோட்டமும், புரட்சிகர சித்தாந்தமும் வளர்ந்து பெருகுவதற்கும், மக்களின் புரட்சிகர ஸ்தாபனத்தை, கட்டியமைப் பதற்கும், பெரும் தடைகளாகவே செயலாற்றும்.

ஒரு தலைவனின் தனிப்பட்ட நடை உடை பாவனைகள் மற்றும் பொது மக்களின் மத்தியிலான நடத்தை ஆகியவற்றின் பல்வேறு அம்சங்கள் குறித்து கேள்விகள் எழுப்பப்படும் போதெல்லாம் கம்யூனிஸ்ட் தலைவர்கள் என்றழைக்கப்படுவோர் வழக்கமாக அளிக்கின்ற ஒரே பதில் ஓ! அது அவரது சொந்த விஷயம் அதைப்பற்றி நாம் அக்கறைகொள்ளவேண்டிய அவசியமில்லை என்பதுதான். இக்கட்சிகளின் தொண்டர்களும், அதன் ஊழியர்களும்கூட இப்படிப்பட்டவற்றை அவரது சொந்த விஷயமாகவே கருதுகின்றனர்.

அதாவது அவர்களது வாழ்க்கையில் அரசியல் அம்சத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட சொந்த அம்சங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்று தான் கூறவேண்டும். அதாவது அவர்களது வாழ்க்கை குறித்த கோட்பாடுகள், விருப்பு வெறுப்புகள், பொறுப்பு குறித்த உணர்வு அல்லது கடமையுணர்வு மற்றும் அறநெறி குறித்த புரிதல்களெல்லாம் முதலாளித்துவ கலாச்சாரத்தாலும் முதலாளித்துவ மதிப்புணர்வுகளாலும் வழிநடத்தப்பட்டாலும், அதனால் ஒன்றும் கெட்டுவிடாது என கருதிக் கொண்டு, வெறுமனே அரசியல் விஷயங்கள் குறித்து அனல் பறக்கப் பேசுகின்ற திறமையும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் மற்றும் மாவோ விடமிருந்து ஆங்காங்கே சில மேற்கோள்களை எடுத்துக் காட்ட முடிந்து, பொருளாதார கோரிக்கையின் அடிப்படையில் போர்க்குணம் கொண்டதென அழைக்கப்படும் சில இயக்கங்களை கட்டியமைக்க முடிந்தால் போதும்; தாங்களும் பாட்டாளி வர்க்க புரட்சியாளர்களாக அல்லது மார்க்சிஸ்ட் லெனினிஸ்டுகளாக ஆகிவிடலாம் என கருதுகின்றனர்.

ஒரு கம்யூனிஸ்ட் ஆக இருப்பதற்குரிய அச்சமற்ற அர்ப்பணிப்பு மற்றும் சிக்கலான போராட்டங்கள் குறித்த கேள்விகள் இவர்களது கைகளில்தான் எவ்வளவு எளிமையாகிவிட்டது! இதன் விளைவாக இக்கட்சிகளில் உறுப்பினர் ஆவதும் எவ்வளவு எளிதாகி விட்டது என்பதையும் பாருங்கள்! தொண்டர்கள், மக்களின் புரட்சிகர போராட்டங்களோடு நேரடியாக இணைத்துக் கொண்டிருக்கின்றனரா அல்லது அதில் செயலாக்கத்துடன் ஈடுபடுகின்றனரா அல்லது அனைத்து செயல்பாட்டுக் களங்களிலும் தங்களது கண்ணோட்டம், கோட்பாடுகள் மற்றும் வாழ்க்கை முறையை, வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் கம்யூனிசச் சித்தாந்தத்திற்கு ஏற்ப வடிவமைத்துக் கொள்ள சமரசமற்ற போராட்டங்களை நடத்துகின்றனரா, இல்லையா என்பது பற்றியெல்லாம் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. தொண்டர்கள் கட்சியினுடைய மக்கள் ஜனநாயகப் புரட்சி அல்லது தேசிய ஜனநாயகப் புரட்சி என்ற கருத்தியலை ஏற்றுக் கொள்கிறார்களா, தேர்தலின்போது சுறுசுறுப்பாக செயல்படுகிறார்களா, மேலும் தங்கள் தலைவர்களின் திருப்திக்கேற்ப கள்ள ஓட்டுகளை சேகரிக்க முடிகிறதா இல்லையா என்பது பற்றித்தான் அதிகக் கவனம் செலுத்துகின்றனர்.

ஆக, அவர்கள் தங்கள் பைகளிலிருந்து உறுப்பினர் அட்டையை எடுத்து காட்டினால் ஒழிய அவர்களின் நடை உடை பாவனைகள், கலாச்சாரத்தரம், தனிப்பட்ட நடத்தை மற்றும் வாழும் பாங்கிலிருந்து அவர்கள் கம்யூனிஸ்டுகள்தான் என்று யாராலும் கூறிவிட முடியாது ■

## சென்னையில் தென்னிந்திய மொழிப் பாதுகாப்பு மாநாடு

# இந்தித் திணிப்பை மட்டுமல்லாது தேசிய கல்விக் கொள்கை 2020ஐயும் எதிர்த்துப் போராட வேண்டும்

2ம் பக்கத் தொடர்ச்சி

உருவாக்கினார். ... மன்னராட்சி காலத்தில் ஆளுவோர் மொழியைப் பற்றி கவலைப்படவில்லை. மக்களாட்சியில் மக்களின் மொழியில் ஆட்சி நடந்தால்தான் சரியாக இருக்கும்... எனவே இப்போதாவது மொழித் திணிப்புகளைத் தடுக்க வேண்டும். இன்று இதை தவறவிட்டுவிட்டால் மேலும் ஆயிரம் ஆண்டுகாலம் சிரமப்பட வேண்டும்,' என்றார்.

**மதுரை கல்லூரி முன்னாள் முதல்வர் பேரா முரளி** பேசுகையில் 'நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள் என்பதை மொழிதான் தீர்மானிக்கிறது. ... இன்று அனைத்து மொழிகளும் நசுக்கப்படுகின்றன – ஒரு மொழிமட்டும் முன்னெடுக்கப்படுகிறது எல்லாப் பண்பாட்டுத் தளங்களிலும் அடக்குமுறை தொடங்கிவிட்டது. ... இந்தியா சுதந்திரம் பெற்றவுடன் காங்கிரஸார் இந்தியைத் திணிக்க முயற்சித்தனர் – ஆனால் 1967ல் காங்கிரஸ் சில தலைவர்கள்கூட இந்தித் திணிப்பை எதிர்த்தனர். ...இந்தித் திணிப்பு வெறுமனே ஒரு மொழிப்பிரச்சினை அல்ல. இது பண்பாட்டு பிரச்சினை ... இதுவரை அரசியல்ரீதியாக பேசப்பட்டுவந்த நிலையில், தற்போது அறிஞர்கள் பேசத் துவங்கியுள்ளனர். வேற்றுமையைக் கொண்டாடுவோம் – ஒற்றுமையாய் வாழ்வோம்.' என்று பேசினார்.

**அகில இந்திய கல்விப் பாதுகாப்பு கமிட்டியின் கர்நாடகா தலைவரும் முன்னாள் கல்லூரி முதல்வருமான பேராசிரியர் அல்லம் பிரபு பெட்டதுரு** பேசுகையில் '1 முதல் 10 வரை அந்தந்த மாநில மொழிகளில் போதிப்பது உகந்ததாக இருக்கும். தொழில்நுட்ப பாடங்கள் அந்தந்த மாநிலங்களில் மாநில மொழிகளில் உருவாக்கப்பட வேண்டும் ... அகராதிகள், தொழில்நுட்ப வார்த்தைகள் உருவாக்க வேண்டும். கலை மற்றும் அறிவியல் புத்தகங்கள் உருவாக்கப்பட வேண்டும்' என்று வலியுறுத்தினார். நமது மொழி உள்ளூர்மயமாக்கப் பட்டால் நமது அறிவும் சுருங்கிவிடும்.



மாநாட்டில் கலந்துகொண்டோர்



மாநாட்டில் மொழித் தியாகிகளுக்கு அஞ்சலி

**லயோலா கல்லூரி செயலாளரும் தாளாளருமான முனைவர் மரியா ஜோசஃப் மகாலிங்கம்** பேசுகையில், 'ஒருவர் சிந்திப்பதும் கனவு காண்பதும் தாய்மொழியில்தான் ... இந்தித் திணிப்பை மட்டுமல்லாது தேசிய கல்விக் கொள்கை 2020ஐயும் எதிர்த்துப் போராடுவோம்.' என்றார்.

மாநாட்டில் நிறைவுரையாக **அகில இந்திய கல்வி பாதுகாப்புக் கமிட்டியின் (AISEC) பொதுச் செயலாளர் தருண் காந்தி நஸ்கர்** பேசுகையில் 'இன்று தியாகிகளுக்கு மரியாதை செலுத்தினோம். இந்தி மொழி திணிக்கப்பட்ட போது 1965ல் 300க்கும் மேற்பட்ட மாணவர்களும் இளைஞர்களும் உயிர்த்தியாகம் செய்தனர். எந்த இந்திய மொழியையும் காப்பாற்ற மத்திய அரசாங்கம் விரும்பவில்லை என்பது அரசாங்கத்தின் போக்கில் தெரிகிறது. 8வது அட்டவணையில் 22 மொழிகள் உள்ளன. இவற்றில் 24,000 பேர் மட்டுமே பேசக்கூடிய சமஸ்கிருதத் திற்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ... ஆங்கிலம் 8வது அட்டவணையில் இல்லை. ஆங்கிலத்தைவிட சமஸ்கிருதத்தை அதிகமானோர் பேசுகின்றனரா? ... இந்தி–இந்து–இந்துஸ்தான் என்ற முழக்கம் சுதந்திரத்திற்கு முன்பே எழுப்பப்பட்டது. இது பன்முகத்தன்மைக்கு எதிரானது. ... வேற்றுமையில் ஒற்றுமை என்பதே நமது பண்பாடு. ... எந்த ஒரு வேற்றுமையையும் தேசவிரோதம் என்று கருதுகின்றனர். ... நாட்டின் ஒற்றுமைக்கு ஒரே ஒரு மொழி தேவை என்று கூறுகின்றனர். கனடாவிலும் அலுவல் மொழிச் சட்டம் உள்ளது. ஆங்கிலம், பிரெஞ்சு என இரண்டு அலுவல் மொழிகளை வைத்துள்ளது. கனடா பிரிந்துவிட்டதா? இந்த மாநாடு மாணவர்களின் இயக்கமாக முன்னேற வேண்டும்' என்று பேசினார்.

மாநாட்டில் 1) இந்தியை ஒற்றை ஆட்சி மொழியாகவும், கல்வி நிலையங்களில் ஒற்றை பயிற்று மொழியாகவும் ஆக்கக்கூடாது. 2) உயர்கல்வி வரை தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும். அதற்காக அனைத்து மாநில மொழிகளையும் குறுகிய காலத்தில் வளர்த்தெடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 3) நாடு முழுவதும் தொடக்க கட்டத்தில் உரிய முக்கியத்துவத்துடன் ஆங்கிலத்தை போதிக்க வேண்டும். 4) நாட்டின் அலுவல் மொழியாக ஆங்கிலம் தொடர வேண்டும். 5) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 8வது அட்டவணையில் ஆங்கிலத்தை சேர்க்க வேண்டும். ஆகிய தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன. அகில இந்திய கல்விப் பாதுகாப்பு கமிட்டியின் தமிழ்நாடு மாநில கமிட்டி உறுப்பினர் எம்ஜெ வால்டேர் நன்றியுரை கூறினார் ■

# பிபிசி அலுவலங்களில் திடீர் வருமானவரி சோதனை செய்ததைக் கண்டிக்கவும் பத்திரிகை சுதந்திரம் நசுக்கப்படுவதை மக்கள் ஒன்றுபட்டு எதிர்க்கவும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) அறைகூவல்

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பிரவாஸ் கோஷ் 15.02.2023 அன்று வெளியிட்ட அறிக்கை:*

குஜராத்தில் முதல்வராக இருந்த மோடி, அங்கு 2002ல் நடைபெற்ற, சுமார் ஆயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட, முஸ்லிம் விரோத மதவெறி கலவரத்தில் அவர் ஆற்றிய பங்கை அம்பலப்படுத்தி, "இந்தியா: தி மோடி கொஸ்டின்" என்ற இரு பகுதிகளைக் கொண்ட ஆவணப் படத்தை பிபிசி வெளியிட்டது. அந்த வீடியோவைத் தடைசெய்து, பிபிசியின் டெல்லி, மும்பை அலுவலகங்கள்மீது திடீர் வருமானவரி சோதனையை அதிகாரிகள் மேற்கொண்டனர். பிரதமர் மோடியை ஊடகங்கள் விமரிசித்தால் எப்படி வாயடைக்கப்படும் என்பதற்கு இந்நிகழ்ச்சி ஃபாசிச ஆட்சியின் மற்றுமொரு எடுத்துக் காட்டாகும். 2014ல் மோடி ஆட்சிக்கு வந்ததுமுதல் விமரிசனம் செய்த பல்வேறு ஊடகங்களின் அலுவலகங்கள் வரிச் சோதனையில் சிக்கித் தவிக்கின்றன. மோடி அரசாங்கத்தைப் பற்றி குறைத்துப் பேசினால் சுதந்திர ஊடகங்களுக்கு என்ன கதி நேரும் என்ற அச்சத்தை இவை எழுப்பியது.

2020ல் கொரோனா பெருந்தொற்றால் பிணங்கள் குவியலாக எரிக்கப்படும் புகைப் படங்களையும் கங்கையில் பிணங்கள் மிதக்கும் காட்சிகளையும் முன்னணி இந்தி நாளிதழ் 'தைனிக் பாஸ்கர்' முதல் பக்கத்தில் வெளியிட்டு அரசுத் தரப்பு வாதங்களையும் புள்ளியியல் தரவுகளையும் கேள்விகுள்ளாக்கியது. உடனே, அந்த நாளிதழின் அனைத்து அலுவலகங்களிலும் வருமானவரி அதிகாரிகள் ரெய்டு செய்தனர். விழிப்புணர்வு கொண்ட ஊடக ஆசிரியர்கள் அந்த பழிவாங்கும் நடவடிக்கையை கண்டித்தனர். மற்றொரு இணைய பத்திரிகையான 'நியூஸ்கிளிக்' மீதும் என்ஃபோர்ஸ்மென்ட் இயக்குனரகம் பாய்ந்தது. இவ்வாறாக, அரசியல் உள்நோக்கத்துடன் செயல்பட, தேச துரோக வழக்குப்பதிவு, மானநஷ்ட வழக்கு, சமூக நல்லிணக்கத்திற்கு ஊறுவிளைவித்ததாக, அமைதிக்கு குந்தகம் விளைவித்ததாக வழக்குகள் என இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்குகள் போடுதல், பேரழிவு மேலாண்மை சட்டம், யுஏபிஏ சட்டம் (UAPA), ஐடி சட்டம் போன்றவற்றைப் பிரயோகித்தல் என தனக்குக் கீழ் இருக்கும் அனைத்து ஒடுக்குமுறை அமைப்புகளையும் ஆளும் கட்சி பயன்படுத்துகிறது. ஆக்ஸ்ஃபாம் போன்ற சிந்தனையாளர் வட்டங்களின்மீது ரெய்டு நடத்தினர். மனித உரிமைகள் பறிக்கப்படுகின்றன சிறுபான்மையினர்மீது பொய்வழக்குகள் புனையப்படுகின்றன என்று சுட்டிக்காட்டியதால் ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் அமைப்பின் இந்திய அலுவலகம் 2020ல் சீல் வைக்கப்பட்டது.

வெளிப்படையான அச்சுறுத்தல்கள், மறைமுக மற்றும் வெளிப்படையான அழுத்தங்கள், புலனாய்வு ஏஜென்சிகளின் இலக்கிற்கு ஆளாவீர்கள் என்ற மிரட்டல்கள் எல்லாம் வருவதாக இந்திய ஊடகவியளாலர்களும் செய்தி வெளியீடு அமைப்புகளும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. பத்திரிகை சுதந்திரத் தர வரிசையில் 180 நாடுகளில் 138வது இடத்தில் இந்தியா தாழ்ந்துவிட்டது என "ரிபோர்டர்ஸ் வித்தவுட் பார்டர்ஸ்" அமைப்பு மதிப்பீடு செய்துள்ளதற்கான காரணத்தை இவையெல்லாம் உறுதிசெய்கின்றன. "வழிக்குவா இல்லையேல் அழிந்துபோ" இதுதான் ஊடக சகோதரர்களுக்கு கொடூர மோடி அரசாங்கம் விடுக்கும் செய்தியாகும்.

இவ்வாறு அரசு அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்தி அரசியல் பழிவாங்குதல் ஊடக சுதந்திரத்தைப் பறித்தல் போன்ற கோழைத் தனமான செயலில் ஈடுபடுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இத்தகைய ஃபாசிச தாக்குதல்களை ஒன்றுபட்டு எதிர்க்க ஊடக நண்பர்களையும் ஜனநாயக எண்ணம் கொண்ட மக்களையும் அறைகூவி அழைக்கிறோம் ■

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# புலம்பெயர்த் தொழிலாளர்களையும் தமிழக மக்களையும் பிளவுபடுத்த முயற்சிக்கும் சக்திகளை முறியடிப்போம்!

தமிழகத்தில் வடஇந்திய தொழிலாளர்கள் தாக்கப்படுவதாக சமீபத்தில் சில வீடியோக்கள் உலாவந்ததைத் தொடர்ந்து பெரும் பரபரப்பும் பதட்டமும் ஏற்பட்டது. அப்படிப்பட்ட வீடியோக்கள் பொய், போலியானவை என தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் வீடியோ வந்தவுடன் வடஇந்திய தொழிலாளர்கள் தாக்கப்படுவதாகக்கூறி பீகார் சட்டப்பேரவையில் பாஜக உறுப்பினர்கள் பிரச்சினை எழுப்பி யிருக்கிறார்கள். தமிழகத்தில் பீகாரிகள் தாக்கப்படும்போது திமுக தலைவர் ஸ்டாலின் பிறந்தநாள் விழாவிற்கு பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் எப்படி செல்லலாம் என பீகார் மாநில பாஜக கட்சி கேள்வி எழுப்பியது. அதுமட்டுமல்ல, இந்த போலி வீடியோக்களை பாஜக தலைவர்களே தம் கட்சியின் சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளதாக கூறப் பட்டுள்ளது.

### பாஜக புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு செய்தது என்ன?

வடஇந்திய தொழிலாளர்களுக்கு கண்ணீர் வடிக்கும் பாஜக மத்தியிலும், உபியிலும் தனி பெரும்பான்மையுடனும் பீகாரில் இதுநாள்வரை கூட்டணியிலும், அஸ்ஸாமிலும் ஆட்சியில் இருந்துகொண்டு 'அச்சாதின்' என்று முழங்கும் இக்கட்சி வேலைவாய்ப்புக்களை அங்கேயே உருவாக்கியிருக்கலாமே? தமிழகம் மற்றும்பிற மாநிலங்களுக்கு வருவதிலிருந்து அத் தொழிலாளர்களைத் தடுத்திருக்கலாமே? மாறாக உலகமயக் கொள்கையை அமுல்படுத்தியும் நாசகர பணமதிப்பு நீக்கம், ஜிஎஸ்டியை அமுல்படுத்தியும் முதலாளித்துவச் சுரண்டலை மேலும் தீவிரப் படுத்தி அங்கிருக்கும் விவசாயிகளையும் தொழிலாளர்களையும் பிச்சைக்காரர்களாக்கி புலம்பெயர்த் தொழிலாளர்களாக ஆக்கிவிட்டு 'அய்யோ வடஇந்தியத் தொழிலாளர்கள் தாக்கப்படு கிறார்களே' என கூக்குரலிடுகிறது பாஜக.

### தமிழகத்தில் சில சக்திகள்

இவர்கள் ஆட்சியில்தான் பல கோடி வடஇந்திய புலம்பெயர் தொழிலாளர்கள் கொரோனா காலத்தில் எந்த உதவியும் வழங்கப்படாமல் நிராதரவாக கால்நடையாக நடந்து ஊருக்குச் செல்வதற்குள் நூற்றுக்கணக்கானோர் மடிந்தனர். கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக மத்தியிலும் பல வட மாநிலங்களிலும் ஆட்சி செய்யும் பாஜக நாட்டு மக்களை படு மோசமான நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது. மக்கள் பாஜக ஆட்சிமீது கடும் கோபத்தில் உள்ளனர். வரும் **2024** நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்து விடுவோமோ என்ற அச்சத்தில் பாஜக வடஇந்தியர்களுக்கு ஆதரவான ஒரு கூக்குரலை எழுப்புகிறது. இந்திபேசும் மக்களை தமிழர்கள் தாக்குவதற்குக் காரணம் இந்தி எதிர்ப்பு வெறி என மிகக் கிரிமினல்தனமான, தனது இந்தித் திணிப்பு கொள்கைக்கு ஆதரவான தூண்டுதல் பேச்சுக்களையும் சமூக ஊடகங்களில் பாஜகவின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை பரப்பினார்.

தமிழகத்தில் இருக்கும் சில சக்திகளையும் நாம் கவனிக்கத் தவறக்கூடாது. 'தமிழினம், தமிழினம்', 'தமிழர்களுக்காக நாங்கள் இருக்கிறோம்' என கூப்பாடு போடும் இச் சக்திகள் வடஇந்திய எதிர்ப்பை கையிலெடுக்கிறார்கள். இத்தகையோர் மாநில உரிமைகள் சிலவற்றை முன்வைத்து, அந்த அடிப்படையில் பாஜகவைக் கடுமையாக எதிர்த்து பேசுகிறார்கள்.

ஆனால், அரசு வேலைவாய்ப்பு துடைவெறியப் படுவதையோ ஆட்குறைப்பு செய்வதையோ தொழிலாளர் விரோதச் சட்டங்கள் அமுல்படுத்துவதையோ எதிர்ப்பதில்லை. தொழிலாளர்களின் ஒற்றுமையை குலைக்க இந்தி, தமிழ், வடக்கு என பிரச்சினையை எழுப்பு கின்றன. இதன் மூலம் அனைத்துத் தொழிலாளர்களின் பிரச்சினைக்கும் மூலகாரணமான முதலாளித்துவ அமைப்பிற்கு எதிராக மக்கள் ஒன்றுபட்டுவிடாமல் இந்த சுரண்டல் அமைப்பை பாதுகாக்கின்றன.

### புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு எதிரான குரலானது தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்கு எதிரானதாகும்

மனிதஇனம் தனது வாழ்வாதாரத்தைத் தேடி புலம்பெயர்வது பல நூறு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அறிவியல் வளர்ச்சி அடைந்த தற்காலத்தில் புலம்பெயர்வது தவிர்க்கமுடியாதது மட்டுமல்ல மாறாக அதீதமாக நடைபெறும். நமது மாநிலத்திலும் இளைஞர்கள் வேலைவாய்ப்புக்களை தேடி மாநிலம் விட்டு மாநிலம், ஏன் வெளிநாடுகளுக்கும் செல்கின் றனர். இந்தியாவின் அனைத்து மாநிலங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் தம் சொந்த மாநிலங்களில் பிழைக்க வழியின்றி புலம்பெயர் கின்றனர். இது, இன்று, மனித வாழ்க்கையின் அன்றாட தேவையாக மாறிவிட்டது.

புலம்பெயர்த் தொழிலாளர்களின் உரிமை களை வரையறுக்கும் சர்வதேச சட்டமே உள்ளது. அதில் இந்தியாவும் கையொப்பமிட்டுள்ளது. இந்திய குடிமக்கள் எவர்வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். தொழில் செய்யலாம். வேலைசெய்யலாம், குடியிருக்கலாம் என இந்திய அரசியலமைப்பு சட்டம் கூறுகிறது. உலகின் பல தேசத்தவரும் பல நாடுகளுக்கும் இந்தியர்கள் செல்கின்றனர். அங்கு பணி புரிகின்றனர். அதுபோன்றுதான் வடமாநிலத்தவர் தமிழகம் வருவதும், அவ்வாறே தமிழர்களும் வேலைத் தேடி மற்ற மாநிலங்களுக்கு செல்வதும் நடக்கின்றது.

இவ்வாறு மக்கள் புலம்பெயர்வதை யாரும் தடுக்கமுடியாது. அவ்வாறு தடுக்கவேண்டும் என்றால் அவரவர் இடத்திலேயே தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி வேலைவாய்ப்பை உறுதிசெய்யவேண்டும். வடஇந்திய தொழிலாளர் கள் தமிழகத்திற்கோ, கேரளத்திற்கோ பல்லாயிரம் மைல்கடந்து வரவேண்டிய அவசியமென்ன? அங்கு சாப்பாட்டிற்கே வழியின்றி அத்தொழிலாளர்கள் இங்கு வருகின்றனர். இங்கு மிகக்கடுமையான வேலைகளை அத்துக்கூலிக்கு செய்கின்றனர். மேலும், வெளிமாநிலத்தவர் என்பதால் அவர்களுக்கு கூலி மிகக்குறைவாக கொடுக்கப்பட்டு உழைப்புச் சுரண்டல் அதீதமாக நடத்தப்படுகிறது. 'இந்திக்காரன்' வருவதால் தமிழ் தொழிலாளர்களுக்கு வேலை பறிபோகிறது என ஆவேசமாக கூறுகிறார்கள். இதேபோன்றுதான், தமிழர்களால் தங்களுக்கு வேலைவாய்ப்பு போய்விட்டதாக கூறி தமிழ் மக்கள் மீது மகாராஷ்ட்ராவிலும், கர்நாடகவிலும் பல நேரங்களில் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இது எவ்வாறு நியாயமற்றதோ அதே போன்றுதான் வடமாநிலத்தவருக்கு எதிராக குரல்கொடுப்பது மாகும்.

### பாஜகவின் மக்களைப் பிரித்தாளும் மத-இனவாத அரசியல்

தங்களுக்கு முன்புள்ள பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து மக்களை திசைத்திருப்பி மதவாத அரசியலை பாஜக கையில் எடுத்து இரண்டாவது முறையாக தனது ஆட்சியை நீட்டிக்க வைத்துயுள்ளது. முதலாளி வர்க்கத்தின் ஏகோபித்த ஆதரவுடன் இவ்வாட்சி தொடர்ந்து வருகிறது. அதே நேரத்தில் அனைத்து மாநிலங்களிலும் தனது கட்சியை ஆட்சி கட்டிலில் அமரவைப்பதற்காக அனைத்து விதமான தில்லுமுல்லு அரசியலில் பாஜக ஈடுபட்டு வருவது மக்களுக்கு தெரிந்த ஒன்றுதான். பல மாநிலங்களில் ஆட்சியை கவிழ்ப்பதும் அல்லது இலஞ்ச ஒழிப்புத் துறையை ஏவிவிட்டு மிரட்டி கட்சியை உடைத்து அவர்களுடைய ஆதரவுடன் ஆட்சி கட்டிலில் அமர்வதும் நடைபெற்று வருவதாகும். தமிழக மக்களிடையே மத–இன உணர்வை உருவாக்க முயற்சிக்கிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பள்ளி மாணவி இறந்த போது அம்மாணவி கிறிஸ்துவ மதத்திற்கு மாற கட்டயப்படுத்தியதால் அம்மாணவி மரணம் அடைந்தது என்று ஆர்ப்பாட்டம் நடத்தி மதவெறியை உண்டாக்க முயற்சித்தது. அதில் தோற்றும் போய்விட்டது. தொடர்ந்து வேறு சிலப் பிரச்சினைகளை உருவாக்க முயற்சித்து, தற்பொழுது வடஇந்தியர்கள் மீது தாக்குதல் என்று கூறி வட மாநிலங்களில் இனவெறியை தூண்ட பாஜக முயற்சிக்கிறது. அதேபோன்று தமிழ் இனவெறியை தூண்டும் சில தமிழக கட்சிகளுக்கு தமிழக மக்கள் தோல்வியை கொடுத்துள்ளனர்.

முந்தைய காங்கிரஸ், தற்போதைய பாஜக ஆட்சிகளின் முதலாளித்துவக் கொள்கைகளால் நாடுமுழுதும் தொழில் வளர்ச்சி முடங்கியுள்ளது. மிககுறிப்பாக சோவியத் யூனியனில் பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சி அகற்றப்பட்டு அவ்விடத்தில் முதலாளிகள் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்பு அதனை தனக்கு சாதமாக்கி உலக ஏகாதி பத்தியம்–முதலாளித்துவம் உலகமயத்தை அமுல்படுத்திய பின் தொழில் வளர்ச்சியும் விவசாயமும் மிகவும் நலிவுற்றுள்ளன. அதன் விளைவாக, கடந்த **25**ஆண்டுகளாக புலம்பெயர்வு மின்னல் வேகத்தில் அதிகரித்துள்ளது. எனவே தமிழ் தொழிலாளர்களுக்காக 'கண்ணீர்' வடிக்கும் இவர்கள் மத்திய, மாநில அரசாங்கங்களின் ஏகாதிபத்திய–முதலாளித்துவக் கொள்கைகளை எதிர்த்து போராடுவதில்லை. மேலும் தமிழ்த் தொழிலாளர்களுக்கு எதிராக இந்தித் தொழிலாளர்களை எதிர்நிறுத்தி உழைக்கும் வர்க்கத்தினரிடையே பிரிவினையை உருவாக்குவது மக்களின் எதிரியாகிய ஆளும் முதலாளி வர்க்கத்தின் சதித்திட்டத்திற்குத் துணை போவதாகாதா?

அனைவருக்கும் வேலைவாய்ப்பையும் சட்டப் படியான குறைந்தபட்ச கூலி, வாழ்விடம், சுகாதாரம் ஆகியவற்றையும் உறுதிசெய்ய வேண்டியது அரசாங்கங்களின் கடமையாகும். எனவே, குறிப்பாக மத்திய அரசாங்கமும், பொதுவில் மாநில அரசாங்கங்களும், ஏகபோக முதலாளிகளுக்கான கொள்கைகளை திரும்பப் பெற்று தொழில் வளர்ச்சி, விவசாய உற்பத்தியை முன்னெடுத்து வேலைவாய்ப்புக்களை பெருக்கி தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யவேண்டும். அதுவரை புலம்பெயர்த் தொழிலாளர்களை முறையாக பதிவுசெய்து அவர்களுக்கு உரிய பாதுகாப்பையும் அவர் களுடைய குறைந்தபட்ச கூலி, வாழத்தகுதியுள்ள தங்குமிடம், சுகாதாரம் ஆகியவற்றை மத்திய, மாநில அரசாங்கங்கள் உறுதிசெய்யவேண்டும் ■

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம்: பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, தூளை, சென்னை 600 007 அச்சகம்: ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, தூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி**

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor: A Rengasamy**
Tel : 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**